

## தமிழ் இலக்கிய மன்றத்தின் ஓராண்டு நிறைவுச் சிறப்பிதழ் - 2005

மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி.



# மகுலம்



இறைவனுக்கு வணக்கம்!
தமிழ்த் தாய்க்கு வணக்கம்!
இன்பத் தமிழ் மொழிக்கு வணக்கம்!
இனிய தமிழ் மக்களுக்கு வணக்கம்!
இணைந்த நல்லாசிரியர்க்கு வணக்கம்!
இளைய நன்மாணாக்கர்க்கு வணக்கம்!

- தமிழ் இலக்கிய மன்றம்-

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரியின்
தமிழ் இலக்கிய மன்றத்தின்
முதலாம் ஆண்டு நிறைவு
சிறப்பிதழ்
2005



# மகூலம்

'மகூலம்' என்பது மலர்ந்த மலரைக் குறிக்கும்

## மகூலத்தின் உள்ளே....
## மணம் வீசுபவை:


01.ஆசியுரை. 01
02.இதழாசிரியர் & பொறுப்பாசிரியர் உரை. 02
03.மன்றத் தலைவர் உரை. 03
04.மன்றச் செயலாளர் உரை. 04
05.படித்துறைகளில் நின்று... 05
06.பாடசாலைக் கீதம் 08
07.தமிழ் மொழி வாழ்த்து 09


### கட்டுரைகள்:


1.தி.லக்ஸிக்கா 14
2.இ.ரவிச்சந்திரன் 21
3.திருமதி.அ.சுந்தமூர்த்தி 25
4.சி.பவித்ரா 30
5.Y.சிவகுமார் 34
6.க.சர்மிளா 42


### கவிதைகள்:


1..நவரெட்ணம் கீர்த்தனா 16
2...கோபி டர்சனா 20
3.அ.ரூபன் 23
4.டெம்ஸ்டன் செலர் 33
5.யோகநாதன் யோகினி 33
6.திருமதி.மி.பவானந்தலிங்கம் 38
7.சி.விசித்ரா 45


### சிறுகதைகள்:


1.க.தினேஸ் 17
2.த.அமர்நாத் 39


### ஏனையவை:


1.க.தனுஜா 24
2.கணேசன் கினோசாந் 29
3.எஸ்.ரம்யா 32
4.பா.ஹிசாந்தி 36

# ஆசியுரை

மு.தவராஜா,
முதல்வர்,
மட்/வாழைச்சேனை
இந்துக்கல்லூரி.

மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் தமிழ்ச்சங்கம் தானேயெடுத்த முயற்சியில் முகிழ்ந்தது மகுலம். 2005இல் இச்சங்கம் நாற்று நட்டது. முதல்வேர், ஆ.மு.சி.வேலழகன். ஆரம்பக் கல்வியினை மட்டுமே கற்று 08 நூல்களை எமக்குத் தந்த எழுத்தாளரின் 'சில்லிக்கொடி ஆற்றங்கரை' நாவலின் அறிமுக விழாவையும் இப்பாடசாலையின் ஆசிரியர் திரு.இ.ரவிச்சந்திரன்.M.A. அவர்கள் க.பொ.த.(உ/த) மாணவர்க்காக எழுதிய 'ஆரியச்சக்கரவர்த்தி கால தமிழிலக்கிய வரலாறு- ஒரு பகுப்பாய்வு' எனும் நூலினையும் வெளியீடும் செய்து வைத்து – நிலம் பதித்தது.

வேரூன்றி மேலெழுந்த விருட்சத்தில் நீரூற்ற ஆளில்லா வாட்டத்தில் வாடியிருந்தோம். மீண்டும் வொன்ஸாய் விருட்சம் வேரை நீட்டி கிளை பரப்பி மகுலம் மணக்கிறது.

மகுலத்தின் அடியிதழும் கடியிதழும் அந்தரத்து மகரந்தமும் கனிக்கான கால்வாய்த் தம்பத்து நுனித்தேனும் சுற்றுந்தேனீயாகும். தோட்டத்தில் நாட்டங்கொண்ட மகுலத் தோட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் அர்த்தந் தேடிச் சென்று இதழ்களை வழங்கி புத்தகமாக்கும் புதுமணம் மகுலத்தில் கட்டுரைகளாகவும் சிறுகதைகளாகவும் கவிதைகளாகவும் பதிப்பித்திருப்பது புதுத்திருப்பம்.

அரும்பாடுபட்டு அற்புதக்குவியலை ஊருக்குக் கொடுக்கும் உத்தமர் வரிசையில் அத்தனை பேரையும் அடக்கி அகத்தில் வைக்க விருப்பம்.

ஏற்பாட்டு ஆசிரியர் குறிப்பாக திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் பாமுகருக்குச் சிறப்பான பாராட்டுக்கள். பூத்துவிட்ட பூக்களாய் ஆக்கங்களை உருவாக்கி தந்த அரிய அத்தனை உள்ளங்களுக்கும் உளங்கனிந்த பாராட்டுக்கள்.

மாற்றாந்தோட்டத்து மல்லிகையினை நுகர்ந்த படிவு மாறி மகுலம் மணப்பதால் சிற்றருவி ஒன்றில் சிறப்பாக ஓடும் சுகம் தொடரவிருப்பம்.

அன்பு உள்ளங்கள் அத்தனை பேருக்கும் பாராட்டு வழங்கி நூலுக்கு ஆசி கூறும் வாய்ப்புத்தந்த மலர்க்குழுவிற்கும் என்றும் ஆறுதல் தரும் ஆண்டவனுக்கும் வேண்டுதல் வேண்டி நன்றி கூறி மலர் சிறக்க வாழ்த்துக்கள்.

## பொறுப்பாசிரியரின் எழுதுகோலில் இருந்து...

திருமதி. ஸோபா.ஜெயரஞ்சித்,
தமிழ் இலக்கிய மன்ற பொறுப்பாசிரியர்,
'மகூலம்' - இதழாசிரியர்,
மட்/வாழைச்சேனை
இந்துக்கல்லூரி.

தமிழ்மொழி இன்று மருவிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் தமிழை வளர்க்க வேண்டும், மாணவர்களின் மொழியாற்றலை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு எமது கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டதே தமிழ் இலக்கிய மன்றம். இம்மன்றம் தனது ஒருவருட நிறைவை முன்னிட்டு ஒரு சிறப்பு மலரை 'மகூலம்' எனும் பெயரில் வெளியிடுவது இக்கல்லூரியின் வரலாற்றில் ஒரு தடமாகும்.

இலைமறை காயாக உள்ள எமது மாணவர்களின் ஆற்றல்களை வெளிக் கொணர்வதில் எடுத்து வைக்கும் முதலடியே இவ்வருடாந்த சஞ்சிகையின் கன்னிப் பிரசவமாகும். எமது தமிழ் இலக்கிய மன்றத்தின் அயராத முயற்சியின் பயனாக பல தடைகளையும் உடைத்துக் கொண்டு மகூலமானது மலர்ந்திருப்பது எமது கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதாகவே உள்ளது.

மகூலத்தின் மலர்ச்சிக்கு கால்கோளிட்டு ஊக்கப்படுத்தியதுடன் ஆசிச்செய்தியையும் தந்த எம் கல்லூரியின் முதல்வர் திரு.மு.தவராஜா அவர்களுக்கும், நேரம் காலம் பாராது இதனை வெளியிடுவதற்கு சகல வழிகளிலும் ஆலோசனைகள், உதவிகளைப் புரிந்து தரமறிந்து தட்டச்சு செய்து மலராக மலரவைத்த எமது கல்லூரியின் பழைய மாணவன், இலக்கிய படைப்பாளி செல்வன்.அ.ஸ்ரீதர் அவர்கட்கும் இவ்விதழுக்கு ஆக்கங்கள் தந்துதவிய கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், குறுகிய காலத்தில் அழகுற கணினி மூலம் அச்சேற்றித் தந்த அக்சித்தா கொமினிகேசன் நிறுவகத்தாருக்கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றிகள்.

இனிவரும் காலங்களிலும் இம்மகூலத்தின் மலர்ச்சியினை 'தடுத்து முற்றுப் புள்ளி வைத்து: தமிழுக்குத் தீங்கிழைக்காது' எமது உள்ளங்கையில் என்றும் பிரகாசித்து புத்துணர்வூட்டும் சஞ்சிகையாக மலர்ந்துகொண்டே இருக்க வேண்டும் என்பதே எமது அவா. இதற்கு அனைவரது ஒத்துழைப்புக்களும் இன்றியமையாதது. இதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

# மன்றத் தலைவர் உரை........

இ.பிரியா,
தலைவர்,
'தமிழ் இலக்கிய மன்றம்'
மட்/.வாழைச்சேனை இந்துக்கல்லூரி.

நீண்ட காலமாக செயற்படாதிருந்த தமிழ் இலக்கிய மன்றம் மீண்டும் எமது கல்லூரி முதல்வரின் உந்துதலிலும் ஆசையிலும் தனது பயணத்தினை ஆரம்பித்திருக்கிறது. அதன் முதல்படி 'மகுலம்' சஞ்சிகையின் மலர்வாகும்.

தமிழில் ஆர்வமுள்ள மாணவர்களையும் மற்றும் எமது கல்லூரியின் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் இம்மன்றம் இயன்றளவு தன்னாலான சிலசில கருமங்களை ஆற்றி வந்துள்ளது.

அவ்வகையில் எமது மன்றத்தினால் வெளியிடப்படும் முதல் மலரின் முதல் இதழ் எம்மால் இயன்றளவு மெருகூட்டப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

இவ்விதழினை நாம் இவ்வளவு விரைவாக வெளியிடுவதற்கு ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் இம்மன்றத்தின் தலைவர் என்ற வகையில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ்விதழை மென்மேலும் வளர்த்தெடுக்க அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களது உளமார்ந்த ஆதரவினை வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

# செயலாளரின் செய்தி

செல்வி.க.சர்மிளா.
செயலாளர்,
தமிழ் இலக்கிய மன்றம்,
மட்/வாழைச்சேனை
இந்துக் கல்லூரி.

எமது கல்லூரியில் நீண்டகால இடைவெளியின் பின்னர் தமிழ் இலக்கிய மன்றம் மணம் கமழத் தொடங்கியிருப்பது எம் அனைவரையும் ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது. எவ்வளவோ இடையூறுகளுக்கு மத்தியிலும் எமது கல்லூரியில் தமிழை வளர்க்கவென தமிழ் இலக்கிய மன்றம் உருவாகி அதனது செயற்பாடுகளை நடாத்துவதில் பங்கேற்க வைத்த இறைவனுக்கு முதலில் நன்றி கூறுகிறேன்.

எமது மன்றமானது விரலுக்கேற்ற வீக்கம் போல தனது வழக்கமான நிகழ்வுகளோடு இம்முறை எமது கன்னி முயற்சியாக 'மகூல'த்தை பிரசவிப்பதனையிட்டு மாணவர் சமூகத்தின் மட்டற்ற மகிழ்வில் நானும் பங்கு கொள்கிறேன்.

எமது சக மாணவ சகோதரர்களின் ஆக்கங்களினதும் எமது செயற்பாடுகளுக்கு என்றென்றும் முதுகெலும்பாக இருந்து வருகின்ற ஆசான்களினது ஆக்கங்களினதும் தொகுப்பே இன்று மகூலமாக மலர்ந்துள்ளது.

இதன் வெளியீட்டுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் பல சிரமங்களை எதிர்நோக்கியும் தளர்வடையாது செயற்பட்ட இதழ்க்குழுவும் அதனோடு தோள் நின்றுழைத்த அனைவரும் பெருமைக்குரியவர்களே.

மகூலமானது மென்மேலும் வளர்ச்சியுற்று எதிர்காலத்தில் எம்மவர்களின் தரமான பலகோண சிந்தனைகளைப் பதிக்கும் களமாகும் என்பதில் ஐயமில்லை.

மகூலத் தமிழ் - எம்
மாணவர் மனதில் என்றும்
மணம் பரப்பட்டும்

# மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தின் படித்துறைகளில் நின்று...

உலகின் ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்த மனிதர்களும் தமது தனித்தனி சிந்தனைகளில் இருந்து விடுபட்டு – ஒன்று கூட முயற்சித்தபோது உருவானது தான் சங்கங்களும் - அமைப்புக்களும். அதுமட்டுமன்றி 'தனிமரம் தோப்பாகாது' போன்ற சான்றோர் வாக்குகளிலும் - சில நோக்கங்களை நிறைவேற்ற – ஒரே நோக்குக் கொண்ட பலரை ஒன்றிணைத்து – உருவாக்கப்படும் அமைப்புக்கள் பல உலகில் தோன்றியுள்ளன.

சமயம்-அறிவியல்-அரசியல்-மொழி-கலாசாரம் எனப்பல துறை சார்ந்தும் இவ்வாறான அமைப்புக்கள் தோன்றுவது இயற்கையே. அவ்வகையில் நமது தமிழ்ச் சமூகத்திற்கு தமிழ்ச் சங்கங்களும் - தமிழ் மன்றங்களும் ஒன்றும் புதிதல்ல.

அன்றுதொட்டு இன்றுவரை தமிழர்கள் சங்கங்கள் மூலமும் பல்வேறுபட்ட அமைப்புக்கள் மூலமுமே எமது மொழியையும் பண்பாட்டினையும் வளர்த்து காத்து வந்துள்ளனர் என்பது வரலாறு.

அதனடிப்படையிலே மாணவர்கள் மத்தியில் குறிப்பாக தமிழை தாய்மொழி ஆகக் கொண்ட நமது மாணவர்கள் மத்தியிலே மொழி-கலை-இலக்கிய-பண்பாடு பற்றியதொரு பண்படுத்தப்பட்ட சிந்தனையைத் தோற்றுவித்து அவர்களது தேடல்- மொழியறிவு - இலக்கிய அறிவு போன்றவற்றை விருத்தி செய்வதற்காக இம்மன்றம் தோற்றுவிக்கப்பட்டது.

கடந்த 04-11-2004 அன்று – எமது கல்லூரியில் நிகழ்ந்த 'கவிஞர்.ஆ.மு.சி.வேலழகனின் -சில்லிக்கொடி ஆற்றங்கரை- நாவல் அறிமுகம். கல்லூரி ஆசிரியர் திரு.இ.ரவிச்சந்திரன் அவர்களது – ஆரியச் சக்கரவர்த்தி கால தமிழ் இலக்கிய வரலாறு- ஒரு பகுப்பாய்வு- என்ற நூல் வெளியீடு'- இந்நிகழ்வுக்கான உடனடித் தேவை குறித்து நமது கல்லூரி அதிபரினால் உடனடியாக உருவாக்கப் பட்ட இம்மன்றத்தில் - ஆரம்பத்தில் 75 மாணவர்கள் வரை இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

பின்னர்- 26-12-2004இல் நிகழ்ந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தின் - தாக்கம் - அதன் பின்னரான நீடித்த செயற்பாடுகள் - போன்ற பல சிக்கல்களுக்கு மத்தியில் தமிழ் இலக்கிய மன்றம் செயற்படாது போனது. இவ்வாறு பல மாதங்களாக கவனிக்கப்படாதிருந்த தமிழ் இலக்கிய மன்றம் 03-07-2005 அன்று

கல்லூரியில் நடைபெற்ற நமது கல்லூரி முதல்வரின் 'மறுபக்கம்' எனும் சிறுகதை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வுக்கு இணை அனுசரணை புரிந்தது.

அதன்பின் மீண்டும் சலனமற்றுப்போன தமிழ் இலக்கிய மன்றத்தின் மூலம் ஒரு சிறப்பிதழை வெளியிட்டு அதன் மூலம் மீண்டும் நல்லதொரு ஆரம்பத்தை தோற்றுவித்து சிறப்பானதொரு முன்னெடுத்தலில் மன்றத்தை வழிநடத்த வேண்டும் என்கின்ற நமது தமிழ் இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியரின் சிந்தனையின் வெளிப்பாட்டில் மலர்வதே 'மகூலம்' எனும் ஓராண்டு நிறைவுச் சிறப்பிதழ்.

இனி மன்றத்தை செம்மையாக வழி நடத்துவதன் மூலம் 'செம்மொழியான எம்மொழிக்கு நம்மாலான பணிகளையாற்றி

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்கின்ற நம் மகாகவியின் பாடலுக்கு அணி சேர்ப்போம்.

இப்பணியில் அதிபர்- ஆசிரியர்கள்- மாணவர்கள் என அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம் வாரீர்!.


## இதழ் பதிப்புத் தரவுகள்

- இதழின் பெயர்: மகூலம்
- பெயர் விளக்கம்: மலர்ந்த மலர்.
- இதழாசிரியர்: திருமதி .ஸோபா ஜெயரஞ்சித்.
- அட்டை வடிவமைப்பு, கணனி தட்டச்சு: எஸ்.ஏ.ஶ்ரீதர்.
- அட்டை பிரிண்டிங், புத்தகம் பிரிண்டிங்:
  அக்ஸித்தா கொமினிகேஸன், & புத்தகசாலை
  விபுலானந்த வீதி,
  வாழைச்சேனை.
  தொ.பே.இல: 065 2258108

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரியின்

# தமிழ் இலக்கிய மன்றத்தின் நிர்வாகக் குழு

**காப்பாளர்:**
மு.தவராஜா (கல்லூரி முதல்வர்).

**உபகாப்பாளர்:** அ.ஶ்ரீதர் (பழைய மாணவன்)

**பொறுப்பாசிரியர்& 'மகூலம்' இதழாசிரியர்:**
திருமதி.ஸோபா.ஜெயரஞ்சித். (ஆசிரியை)

**தலைவர்:**
செல்வி.இ.பிரியா.

**உபதலைவர்:**
செல்வி. நே.டிகாஸி.

**செயலாளர்:**
செல்வி. க.சர்மிளா.

**உப செயலாளர்:**
செல்வன்.நே. காண்டீபன்.

**பொருளாளர்:**
செல்வன்.நே.அபிலாஸ்.

**நிர்வாக உறுப்பினர்கள்:**

01.செல்வன்.க.தினேஸ்குமார்.
02.செல்வன்.ந.கவிதாஞ்சன்.
03.செல்வன்.ம.ரஜனீதன்.
04.செல்வன்.வ.வேதாகரன்.
05.செல்வன்.ப.பத்மசாந்.
06.செல்வன்.க.நிரூபன்.
07.செல்வி.யோ.யோகினி.
08.செல்வி.இ.நிரோஜா.

# பாடசாலைக் கீதம்

வாழ்த்தி வணங்கிடுவோம் – கல்வி
கல்வி வளர்ந்திடப் போற்றிடுவோம்.

வளம்பல சூழ்ந்த நல் வாழைச்சேனையில்
உளம் மகிழ் கலைகளை உணர்ந்தே பயின்றிட
இடம் தரும் கூடமாம் இந்துக்கல்லூரியை

(வாழ்த்தி…)

சித்திகள் பலதரும் சித்தி விநாயகர்
பக்கத்திலிருக்கையில் பயமேது நமக்கு
நித்தமும் அவர் புகழ் நினைந்து நாம் பாடிட

(வாழ்த்தி…)

இனமத பேதங்கள் இல்லாது கல்வியை
மனங் கொண்டு பயிலவும் மகிழ்வுடன் வாழவும்
களம் தரும் கல்விக் கூடத்தை நாமென்றும்

(வாழ்த்தி…)

தாய் தந்தை குரு தெய்வம் தாள் பணிந்தே வணங்கி
தாய் மொழி தமிழுடன் ஆங்கிலமும் பயின்று
ஓயாது பணியாற்றி உயர்ந்திட நாமென்றும்

வாழ்த்தி வணங்கிடுவோம் – கல்வி
வளர்ந்திடப் போற்றிடுவோம்.

# தமிழ் மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே

வானமளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தண்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

–மகாகவி. சுப்பிரமணிய பாரதியார்–

வாழைச்சேனை பிரதேசத்து முயற்சிகள்

# நூல் வெளியீட்டு -இதுவரை....



**எஸ்.ஏ.ஸ்ரீதர்**

ஆரம்ப காலத்தில் வாழைச்சேனையின் எல்லைகளாக வடக்கே மாங்கேணியும் தெற்கே கும்புறுமூலையும் விளங்கின. ஏறத்தாழ 150 சதுர மைல் பரப்புடையதாக விளங்கியது எமது பிரதேசம். காலப்போக்கில் அரசியல், சமூக மாற்றங்களுக்கு உட்பட்டு எல்லைகள் சுருங்கி, பரப்புக்கள் குறைந்து இன்று சிறுசிறு குடியிருப்புக்களாக மாறி நிற்கிறது. இப்போது வாழைச்சேனை பிரதேசமாக கோறளைப்பற்றின் கீழ் இருப்பது வடக்கே நாசிவந்தீவிலிருந்து தெற்கே கும்புறுமூலை வரை உள்ள பகுதியாகும்.

வாழைச்னை பிரதேசம் பல மாற்றங்களுக்கு உட்பட்டு வந்திருக்கிறது. 'காக்கைப் பள்ளி' எனும் எமது ஊரின் பண்டைய பெயர் காலப்போக்கில் இங்கு மருங்கை மரங்கள் அதிகமாக நிறைந்திருந்தமையால் 'மருங்கையடிப் பூவல்' எனப்பெயர் மாற்றம் பெற்றது. அதன் பின்னரே, 'வாழைச்சேனை' என்ற இப்போதைய பெயரைப் பெற்றுள்ளது. இத்தகவல்களை திருமதி. சி.ப. தங்கத்துரை அவர்களது "வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வரலாறு" எனும் நூலில் காணலாம்.

பெயர் மாற்றங்களுக்கு உட்பட்டு வந்த வாழைச்சேனையில் இப்போது கலை-இலக்கிய நிகழ்வுகளுக்கான மாற்றம் நிகழ்ந்து வருவது மகிழ்ச்சிக்கு உரியது. இருப்பினும் எமது மக்களில் பெரும்பாலானோர் கேளிக்கை- களியாட்டங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கலை-இலக்கிய நிகழ்வுகளுக்கு கொடுப்பதில்லை என்பது வருத்தத்திற்குரியது.

ஆரம்ப காலங்களில் நாட்டுக்கூத்தும், அதனைத் தொடர்ந்து மேடை நாடக மரபும் பாரம்பரியமாக கட்டிக் காக்கப்பட்டு வந்த வாழைச்சேனை பிரதேசத்தில் ஒரு காலத்தில் மேடை நாடகம் செழிப்புடன் விளங்கியது. ஏராளமான நாடகக்கலைஞர்களையும்- நாட்டுக்கூத்துக் கலைஞர்களையும் கொண்டதாக எமது பிரதேசம் திகழ்ந்தது. குறிப்பாக இப்போது நம் மத்தியில் வாழ்ந்து வரும் திரு.ஹெட்டி ஆராச்சி மெத்தியேஸ், திரு.தாழை செல்வநாயகம் போன்றோர் நாடகத் துறையில் பிரகாசித்தவர்களாவர்.

அதன்பின் மக்கள் மத்தியில் வானொலி, தொலைக்காட்சி போன்றவை நுழைந்து- இப்போது மக்கள் தொலைக்காட்சிகளிலேயே அடக்கமாகி விட்டனர். அதனால் கலை-இலக்கியம் என்றால் என்ன? என்று கேட்கும் அளவிலேயே நம்மவர்களது உளப்பாங்கு உள்ளது.

இருப்பினும் சனத்தொகை பெருகி - தொழினுட்பம் பெருகி-நாடுகளும் மக்களும் முன்னேறிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் கலை - இலக்கியத்தின் தேவை கருதி பல நாடுகள் -பல மொழி வல்லுநர்கள் - கலை இலக்கிய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வருகின்றனர். இலக்கியம் என்பது காலத்தின் தேவை. இன்றைய சமூகத்தின் நாளைய ஆதாரங்கள். அவற்றை முறையாகப் பேணுதல்- தொலைநோக்குச் சிந்தனை கொண்ட அனைவரது கடமையாகிறது.

அவ்வகையில் சமீப காலமாக நமது பிரதேசத்திலும்- கொஞ்சம் கொஞ்சமாகவேனும் நூல் வெளியீடுகள் நிகழ்ந்து வருவது சிறிது ஆறுதலைத் தருகிறது. நாளைய வளர்ச்சிக்கு இதுவொரு ஆரம்பம். இத்தருணத்தில் வாழைச்சேனை பிரதேசத்தில் இதுவரை இடம்பெற்றுள்ள நூல் வெளியீடுகள் பற்றிக் காண்பது, இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள வெளியீட்டு முயற்சிகள் பாடசாலை சார்ந்தும், அரச நிறுவனங்கள் சார்ந்தும் சில தனியார் சார்ந்தும் நடைபெற்றுள்ளன. அவற்றுள் சில சஞ்சிகைகள், சில படைப்பிலக்கிய நூல்கள் என்பன அடங்குகின்றன.

இவ்வகையில் இங்கு வெளியிடப்பட்ட சில சஞ்சிகைகளைப் பார்ப்போம்:

## 01.பாடசாலைச் சஞ்சிகைகள்:

1960 காலப்பகுதிகளில் இன்றைய வாழைச்சேனை இந்துக்கல்லூரியான அன்றைய வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் 'வான்மதி' என்கின்ற பெயரில் ஒரு கையெழுத்து சஞ்சிகை வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது.

அதன் பின்னர் 1965 காலப்பகுதிகளில் வாழைச்சேனை காகித ஆலையில் இருந்து 'வண்ணம்' எனும் கையெழுத்து பத்திரிகையும், 1966இல் அதே இடத்திலிருந்து 'எழில்' எனும் கையெழுத்து பத்திரிகையும் வெளிவந்துள்ளன.




அதன்பின்னர், 1980 காலப்பகுதியில் வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் 'செவ்வாழை' எனும் கையெழுத்து சஞ்சிகை வெளியிடப்பெற்றுள்ளது. அதன்பின் இவ்விதழ் அச்சு வடிவில் 1992, 1997களில் இரண்டுமுறை வெளிவந்தது.



அடுத்து மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 1996இல் இருந்து 2001 வரை 'புத்தொளி' எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டு வந்துள்ளது.



இவற்றைவி மட்/விநாயகபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் 'அருவி' எனும் பெயரில் கையெழுத்து வடிவிலும் பின்னர் 2004இல் அச்சுப் பிரதியாகவும் வளர்ந்து அண்மையில், 2005 நவம்பரில் மீண்டும் அச்சுக்கண்டுள்ளது அருவி.

ஏனைய பாடசாலைகளில் சஞ்சிகை வெளியீடுகள் பற்றி எமக்குப் போதிய தகவல்கள் கிடைக்கப் பெறாமையால் அவை குறித்து இங்கு எழுதப் பெறவில்லை.

## 02.கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினரின் நூல் வெளியீட்டு முயற்சிகள்

கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து நமது கலாசாரப் பேரவையினர் வருடந்தோறும் முத்தமிழ் விழா நடாத்துவதோடு 'இளம்பரிதி' எனும் பெயரில் சஞ்சிகையினையும் வெளியிட்டு வருகின்றனர். அவ்வகையில் 2000ம் ஆண்டில் ஒரு இதழும், 2001–2002 க்குமாகச் சேர்த்து ஒரு இதழும் தொடர்ந்து 2003, 2004, 2005களில் ஒவ்வொரு இதழ்களுமாக இதுவரை ஐந்து இளம்பரிதிகளை வெளியிட்டு வாழைச்சேனைப் பிரதேசத்து வெளியீட்டுத்துறைக்கு பெரும்பங்காற்றி வருகின்றனர்.








இளம்பரிதி தவிர 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நமது கல்லூரி முதல்வர் திரு.மு.தவராஜா அவர்களது 'மறைமுகம்' எனும் சிறுகதைத் தொகுப்பையும் அதே வருடம் பேராசிரியர்.செ.யோகராசா அவர்கள் தொகுத்தளித்த 'ஈழத்து சிறுவர் அறிவியல் பாடல்கள்' எனும் நூலினையும் வெளியிட்டு தமது வெளியீட்டு முயற்சிகளில் முன்னோக்கிக் காலடி எடுத்து வைத்துள்ளது.

### ஏனைய நிறுவன, தனியாரது சஞ்சிகை,நூல்கள் வெளியீடு



1996இல் கோறளைப்பற்று கல்விப் பிரதேச ஆசிரியர் ஒன்றியத்தால் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 95/96க்குரிய சிறப்பிதழ் ஒன்றினை 'ஆசிரிய தீபம்' என்கின்ற பெயரில் வெளியிட்டுள்ளது.



1998இல் திருமதி.சிய.தங்கத்துரை அவர்களது "வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வரலாறு" எனும் நூல் வெளியிடப் பட்டுள்ளது.

அதன் பின்னர் 2004இல் அ.ஸ்ரீ தரின் 'தமிழன் குரல்' எனும் மாத இதழ் 2004 ஏப்ரலில் இருந்து வெளிவந்துள்ளது. இரண்டாவது இதழிலிருந்து 'இலக்கியா' எனப் பெயர் மாற்றம் பெற்றது. 04 இதழ்கள் வரை வெளிவந்து நின்றுவிட்டது. பின்னர் ஜூலை 2004இல் இவ்விதழாசிரியரின் 'சங்கத் தமிழ் சிறுகதைகள்' எனும் தொகுப்பை வாழைச்சேனை சீகோ முகாமைத்துவக் கல்லூரியினர் வெளியிட்டுள்ளனர்.




இதே வருடம் செல்வன் மணிரஞ்சன் 'கம்ப்யூட்டர் பவர்' என்னும் கணினிச் சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இவ்வருடத்தில் இன்னும் 02 வெளியீடுகளும் நிகழ்ந்து உள்ளன. மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி. இ.சுந்தரமூர்த்தி அவர்கள் 'மருங்கை' எனும் சிறுவர் பாடல் தொகுதியினையும், இக்கல்லூரியின் ஆசிரியர் திரு.இ.ரவிச்சந்திரன் அவர்கள் 'ஆரியச்சக்கரவர்த்தி கால தமிழ் இலக்கிய வரலாறு – ஒரு பகுப்பாய்வு' எனும் நூலினையும் வெளியிட்டுள்ளனர்.

இவை கடந்த வருடம் எம்மத்தியில் நிகழ்ந்த நூல் வெளியீடுகளாகும். இவை தவிர, மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் பேரவையும் – வாழைச்சேனை தமிழ் சங்கமும் – நமது தமிழ் இலக்கிய மன்றமும் இணைந்து, நமது கல்லூரி முதல்வர் திரு.மு.தவராஜா அவர்களது 'மறுபக்கம்' எனும் சிறுகதை தொகுப்பினை இவ்வருடம் வெளியிட்டுள்ளன.

தற்போது அ.ஸ்ரீ தரின் 'இலக்கியச் சிந்தனை' எனும் சிற்றிதழும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

தவிர, அண்மையில் வாழைச்சேனை ஏசியன் கம்ப்யூட்டர் சென்டரில் இருந்து 'ஸ்டுடண்ட' எனும் கல்விச் சஞ்சிகையும் வெளியிடப்பட்டு உள்ளது.

இதுபோன்ற நிகழ்வுகள் வாழைச்சேனை பிரதேசத்து வெளியீட்டு முயற்சிகள் பற்றிய ஒரு நம்பிக்கையை தோற்றுவிக்கின்றன.

# திருக்குறள்



"வள்ளுவன்" தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்பது பாரதி வாக்கு. வள்ளுவன் அருளிய தமிழ் மறைச் செல்வமாம் திருக்குறள். அத்தோடு தமிழினத்தின் பெருமையை உலகுக்கறிவித்த ஒப்பற்ற இலக்கியமாகவும் , தமிழன் பெற்ற செல்வத்துள் சிறந்த செல்வமாகவும் திருக்குறள் விளங்குகின்றது. மனித குலம் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் , எந்தச் சூழலில் எந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்தாலும் அங்கெல்லாம் அறிவு எனும் நல்லொளியைப் பாய்ச்சி வாழ்வு சிறந்து விளங்க வழிகாட்டும் நூல் திருக்குறள் ஆகும்.

இதில் 1330 குறள்கள் உள்ளன. இவற்றை 133 அதிகாரங்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு அதிகாரமும் பத்துப் பத்துக் குறள்களைக் கொண்டுள்ளது. திருக்குறளின் மறுபெயர்களாக முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், பொய்யாமொழி, தமிழ்மறை, பொதுமறை, வாயுறைவாழ்த்து, போன்றவை விளங்குகின்றன. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

திருக்குறளானது "அணுவைத்துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்" என்று ஔவையார் கூறியிருக்கின்றார். திருக்குறள் ஓதுவதற்கேற்ற முறையில் அமைந்திருந்தாலும் கூட மிகச் செறிவான மொழி நடையிலும், சொற்சுருக்கத்துடனும் அமைக்கப்பட்டுள்ளது. யாவரும் எளிதில் பெற்று கற்று மகிழும் வண்ணம் இனிய எளிய உரையுடன் திருக்குறள் விளங்குகின்றது.

திருக்குறளில் அறத்துப்பாலை மூன்று வகையாகப் பிரிக்கலாம். பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்பவையாகும். அதாவது மனிதனின் வாழ்க்கை முறை, விதி என்பவற்றை விளக்குகின்றது. பொருட்பாலை 7 வகையாகப் பிரிக்கலாம். அதாவது அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படைப்பியல், நட்பியல், குடியியல் என்பவையேயாகும்.. காமத்துப்பாலை 2 வகையாகப் பிரிக்கலாம். களவியல், கற்பியல் என்பவையாகும். அதாவது ஆணினதும், பெண்ணினதும் வாழ்க்கை முறையை விளக்குகின்றது.

கீட்ஷெறி தி.லக்ஷிகா, தரம்:9C

இவ் இயல்புகள் யாவுமே மக்களின் வாழ்க்கையோடு இயைந்ததாக, மக்கள் இவ்வாறுதான் வாழ வேண்டுமென இலக்கணம் கூறுவதாக அமைந்துள்ளன. இந்நூல் எல்லோருக்கும் ஒன்றாக நீதியைக் கூறியதால் "பொதுமறை" எனப் புகழப்படுகின்றது. உலகில் அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான நீதிகளையும் கூறுவதில் சிறந்து விளங்குகின்றது. இத்தகைய நூலை நாமும் பயின்று பெருமையடைவோமாக.

---

# வாழ்க்கையில் வெற்றிபெற...



இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வாழ்க்கையில் வெற்றி பெற ஒரு யோசனை கூறியுள்ளார். அவரது யோசனை-

(1) எதையும் அறிந்து கொள்ள ஆவல் கொள்ளுங்கள்.

(2) அறிந்தது பற்றிச் சிந்தனை செய்யுங்கள்.

(3) சிந்தித்ததைச் செயல்படுத்துங்கள்.

(4). செயல்படுத்த கடினமாக உழையுங்கள்.

(5) முதல் முயற்சியிலேயே வெற்றி கிட்டிவிடாது. வெற்றி பெறும்வரை விடாது முயற்சி செய்யுங்கள்.

(6 .நாள்தோறும் ஒரு மணி நேரமாவது நல்ல நூல்களை படித்து, உங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.



# இன்னொரு தேசத்து இரவுகள்...



கவிதை

நவரெட்ணம் கீர்த்தனா

நதியோர நாரைகளே
நான் வரும் வரை தவமிருங்கள்
என் கனவுகளுக்காக!..

அந்த நித்திய நிலா
பனிப் போர்வை மூடி இன்னும்
நீராட வருகிறதா அந்த
நதியோரம்!...

இலைக்கப்பல் விடும் அந்த வானமரங்கள்
எனக்காகக் காத்துக் கிடக்கிறதா
வசந்தம் தராமல்...

அந்த மஞ்சள் குளித்த மூங்கிலும்
பச்சை குத்திக் கொண்ட மூங்கிலும்
இன்னும் சண்டை பிடித்துக் கொள்கிறதா!...

வயலைக் கண்டு பிடித்த கானாங் கோழிகள்
பாதம் பதித்த தடங்கள் இன்னும்
இருக்கிறதா!...

நாரைகளே என் செல்லக் கெண்டைகளைப்
பிடித்து உண்டு விடாதீர்கள்
நான் வந்து உணவு தருகிறேன்.
என் வசந்தங்கள் எல்லாம் காத்துக் கிடக்கிறதா?..
எனக்காக! இதோ வந்து விடுகிறேன்
என் மந்தைவெளியே கொஞ்சம் பொறுத்திரு...

# விடிவில்லா வேதனைகள்

சிறுகதை

க. ஜீனேஸ்

-தரம்:11



வட்டச் சக்கரங்கள் தவண்டு ஓட மதம் கொண்ட யானையின் அலறல் போல ஒலியெழுப்பி நித்தமும் கக்கும் புகையோடு புறப்பட்டது வாழைச்சேனை நகர்ப் புகைவண்டி. கசங்கிய ஆடையும், கையிலே மதிய உணவுப் பொதியும், சேட் பையில் சில நோட்டுக்களுடனும் வண்டியில் ஏறினான் சஞ்ஜீவன். இருக்கையில் அமர்ந்து கொண்ட சஞ்ஜீவன் பொழுதொன்று போகட்டும் என எண்ணி இருக்கையிலிருந்து எழும்பி வந்து வண்டியின் கதவோரமாக வந்து இயற்கையின் கொடையாய்க் கிடைத்த வனமதனைக் கண்ணுற்றான். சிறிது நேரம் சென்றது. சஞ்ஜீவனின் உள்ளக் குமுறல்கள் கரகமாட சஞ்ஜீவனின் கண்களிலிருந்து நீர் மழையாகக் கொட்டியது.

"என்னடா மோனே அழுறா!" இது ஒரு காவோலையின் குரல் சஞ்ஜீவன் பக்கமாக ஒலித்தது.

"ஒன்றுமில்லை ஐயா எல்லாம் காலத்தின் கோலம் தான்" என்றான் சஞ்ஜீவன்.

"என்னடா மோனே காலத்தின் கோலமென்றெல்லாம் சொல்லுறா கொஞ்சம் புரியுற மாதித்தான் சொல்லேன்" மறுபடியும் அம்முதியவர் குரல்தான் அது.

"எல்லாம் எனக்கு இறைவன் எழுதிய எழுத்துத்தான். எண்ட விதிதான் என்னை இப்படி ஆட்டுது.

மனமாறுதலடையலாம் என நினைக்கிறேன்."

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன் வாழைச்சேனை நகரில் பிறந்தவன் சஞ்ஜீவன் தனது படிப்பை தரம் பதினொன்று வரைக்கும் படித்து முடித்து விட்டு குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக வாழைச்சேனை பொன்னையா முதலாளியின் கடையொன்றிலே வேலை பார்த்தான். சில வருடங்கள் சென்றன. சஞ்ஜீவனோ அவ்வூரைச் சேர்ந்த சுமதி எனும் பெண்மணியைத் திருமணம் செய்தான்.

அப்போது சஞ்ஜீவனுக்கு வயது பத்தொன்பது. அடுத்த ஆண்டில் சஞ்ஜீவன் ஓர் அழகான ஆண்குழந்தைக்குத் தகப்பனானான். ஆனால் சஞ்ஜீவனின் விதியோ என்னவோ தனது ஆண் குழந்தையையும் அழகிய மனைவி சுமதியையும் விட்டு விட்டு அவர்களுக்குத் தெரியாமலே மட்டக்களப்புக்கு ஓடிவிட்டான்.

மட்டக்களப்புக்குச் சென்ற சஞ்ஜீவன் அங்கு ஆடைத்தொழிற்சாலையொன்றில் சேர்ந்து சிறிது காலம் வேலை பார்த்தான். இவ்வாறு வாழ்ந்த சஞ்ஜீவன் அவன் வேலை பார்க்கும் தொழிற்சாலையைச் சேர்ந்த சங்கீதா எனும் பெண்மணியைத் திருமணம் செய்தான். ஆனால் சஞ்ஜீவனோ தனது குழந்தையையோ, மனைவியையோ பற்றி ஒரு கணம் கூட நினைத்துப் பார்த்ததில்லை. எனக்கு எல்லாமே இந்த சங்கீதா தான் என்று மட்டக்களப்பிலேயே தங்கிவிட்டான். இவ்வாறு சில வருடங்கள் உருண்டோடின. சஞ்ஜீவன் எவள் மீது நம்பிக்கை வைத்தானோ அவள் அவன் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டாள்.

இதனால் கலக்கமுற்ற சஞ்ஜீவனோ என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தான். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஓர் பெண் இருப்பாள் என்பார்களே! நான் இனி என்ன செய்வேன் எனக் கதறினான். இதற்கெல்லாம் காரணம் நான் சுமதிக்குச் செய்த கொடுமைதான் என உணர்ந்த சஞ்ஜீவன் உடனே வாழைச்சேனை சென்று மீண்டும் சுமதியுடன் வாழ வேண்டும் எனும் ஆதங்கத்துடன் புறப்பட்டான் சஞ்ஜீவன்.

இவ்வாறு பொக்கிசமாய்க் கிடந்த தனது சோக வரலாற்றை திறந்து விட்டான் அவன். இவ்வாறு அவன் கூறி முடிக்கையில் வாழைச்சேனை நகரும் வந்தது. வண்டியிலிருந்து இறங்கிய சஞ்ஜீவனோ நேராகத் தனது மனைவி சுமதி வாழும் இடத்தைத் தேடிப் புறப்பட்டான். மாலை நேரமாகையால் சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தான். பறவைகளும் தத்தம் கூடுகள் நோக்கிச் சென்ற வண்ணமே இருந்தது.

சஞ்ஜீவன் வாழைச்சேனை விட்டுச் சென்று பத்து வருடங்கள் ஆகையால் அந்நகர் பெரும் மாற்றத்தையே கொடுத்தது அவனுக்கு. வெறுவானில் வட்டமிடும் வானம் பாடிகள் சஞ்ஜீவனை வரவேற்பது போல தோன்றிற்று. இத்தனைக்கும் மத்தியிலே தனி மரமாய் வந்துகொண்டிருந்தான் அவன். பொழுதும் போனதால் மெல்ல மெல்ல காரிருள் சூழ ஆரம்பித்தது. இதனால் தனது மனைவியின் வீட்டைத் தேடுவது அவஸ்தையாக இருந்தது அவனுக்கு.

எங்கோ ஒரு வீதியோரத்தில் ஒரு குடிசை. குடிசையினுள்ளே ஒரு விளக்கு எரிந்து ஒளி பரப்பிக் கொண்டிருந்தது. குடிசையோரமாக வந்த சஞ்ஜீவன் படலையைத் தட்டினான். காரணம் தன் மனைவியின் வீட்டின் முகவரியை அறிந்து கொள்வதற்காக.

திடீரென படலை திறக்கப்பட கையிலே விறகும், பக்கத்திலே ஒரு சிறுவனுடன் வெளியே வந்தாள் அக்குடிசை வீட்டுப் பெண். அது வேறு யாருமல்ல. சஞ்ஜீவனின் மனைவி சுமதியும், பத்து வயதான அவனின் மகனும்தான் அது. கைகள் பதற, கால்கள் தடுமாற தாயை விட்டுப் பிரிந்த குஞ்சுகள் மீண்டும் தாயைச் சேரும் போது ஏற்படும் ஆனந்தம் போல இன்பக் கண்ணீர் பொழிந்தான் சஞ்ஜீவன்.

சஞ்ஜீவனைக் கண்டதும் கட்டி அணைக்க வேண்டுமென்ற எண்ணம் சுமதிக்கு. ஆனால் என்ன செய்வது சுமதிக்கு அவளின் பெற்றோர்கள் வேறொரு திருமணம் செய்து கொடுத்து விட்டார்களே!.

“சுமதி விறகைக் கொண்டு வாவனடி அடுப்பு அணையப் போகுது.” என்றழைத்தான் சுமதியின் இரண்டாவது கணவன். இதனை உணர்ந்து கொண்ட சஞ்ஜீவனோ தீயிலிடப்பட்ட பங்கயம் போல அவனுடைய உள்ளமும் வாடி வதங்கிற்று. சிதறிப் போன வாழ்க்கையோடு சுமதியுடன் மறு மொழி பேச முடியாதவனாய் உள்ளம் போன போக்கிலே அவன் எங்கோ புறப்பட்டான்.

– நன்றி ‘உதிரா மலர்’

## உருவமும் பருவமும்:

தமிழ்ச்சொற்கள் பொருள் நிறைந்தவை. சில சொற்கள் உருவத்தையும் காட்டக் கூடியவை.

சிறுமி – 05 வயதுக்குட்பட்ட பெண்
பேதை – 10 வயதுக்குட்பட்ட பெண்
மங்கை – 16 வயதுக்குட்பட்ட பெண்.
மடந்தை – 25 வயதுக்குட்பட்ட பெண்
அரிவை – 30 வயதுக்குட்பட்ட பெண்.
தெரிவை – 35 வயதுக்குட்பட்ட பெண்.
பேரிளம்பெண் - 45 வயதுக்குட்பட்ட பெண்
தலைவி – 60 வயதுக்குட்பட்ட பெண்.
கிழவி – 60 வயதுக்கு மேல்.







# சிறுவர் பாட்டு

*-ம.கோபி டர்ஷனா-*

எங்கள் வீட்டில் ஒரு குதிரை
எனக்கே சொந்தம் அக்குதிரை
தங்கம் போலே அதன் நிறமாம்
சவாரி செய்ய உதவிடுமாம்

கொள்ளும் புல்லும் கேட்காது
கொடுத்தால் கூட தின்னாது
பல்லைக் காட்டி அணைக்காது
பலமாய் காலால் உதைக்காது

காட்டுச் சிங்கம் வந்தாலும்
கலங்கி ஓடி ஒழிக்காது
அஞ்சாதிருக்கும் என் குதிரை
ஆறே ரூபாய் மரக்குதிரை

# ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையும் சக்திகள்

கட்டுரை

இ.ரவிச்சந்திரன் MA, Dip.in.ed



சனநாயகம் என்பது மக்கள் ஆட்சியாகும். 'டிமோக்கிரசி' என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து பெறப்படுகிறது சனநாயகம். ஆபிரகாம் லிங்கன் "மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களின் ஆட்சி" என்று வரைவிலக்கணம் செய்தார்.

ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையும் மிக முக்கியமான சக்தி மக்களின் அறியாமையாகும். கல்வி வசதிகளை விரிவாக்குவதனாலும் பரவலாக்குவதாலும் அறிவு வளர்ச்சியை உண்டாக்கலாம். அறிவைப் பெருக்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். பத்திரிகையும் பொதுசனத் தொடர்பு சாதனங்களும் சுதந்திரமாக இயங்கி எல்லா விடயங்களையும் மக்களுக்குச் சரிவரத் தெரிந்து கொள்ள வாய்ப்பேற்படுத்த வேண்டும். ஆனால் எங்கள் நாட்டில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு பத்திரிகை, ஒரு தொலைக் காட்சி என்று பக்கச் சார்பாக தொழிற்பட்டு வருகின்றது. நடக்காத விடயங்களை நடந்தது என்றும் 'முழுப்பூசணிக் காயை சோற்றுக்குள் மறைத்து' விடுகின்றனர். எப்படி மக்களுக்கு அவர்கள் உண்மையை உணரவைக்க முடியும்.

அறிஞர்களும் தலைவர்களும் தேவையான அறிவுரைகளையும் விளக்கங்களையும் தந்து மக்களின் அறியாமையை போக்க முன்வரவேண்டும். ஆனால் எங்கள் நாட்டில் அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் மக்களின் அறிவைக் கெடுத்து அறிவிலிகளாக்குகின்றனர். ஆட்சியைப் பிடிப்பதற்காகவும் ஆசனங்களை பெருக்குவதற்காகவும் அமைதியான மக்களின் மனங்களில் இனத்துவேச விதைகளை விதைக்கின்றனர். இதனால் ஜனநாயகம் அறிவிலிகளின் சனநாயகம் என்று கேலி செய்யப்படும் அளவுக்கு மக்கள் அறிவிலிகளாக இருந்தால் சனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படும். ஆனால் அதனை உணராது மக்களை அறிவிலிகளாக்குகின்றனர் தலைவர்கள்.

ஆட்சியில் அமர்பவர்களின் சுயநலப் போக்கும் திறமையீனமும், தீர்மானங்களைச் சரிவரச் செய்து கொள்ள முடியாத நிலையும் ஆட்சியில் நம்பிக்கையிழக்கச் செய்து விடுகின்றன.

மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்களென்று ஆட்சியாளர்களை நம்புகின்றனர். ஆனால் ஆட்சியாளர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காது, மக்களின் பிரச்சினையை வைத்துக் கொண்டே ஆட்சியைத் தம் வசம் வைத்துக் கொள்ள நினைக்கிறார்கள்.

அதனால் நம்பிக்கை வீணானால் சனநாயகம் விரோத சக்திகளின் சொற்களுக்குச் செவி சாய்க்கவும், அச்சக்திகளின் வழிநடத்தலை நாடவும் முன்வருவர். இவ்வாறான நடவடிக்கைகளினால்தான் J.V.P போன்ற சனநாயக விரோதிகள் வளர்வதற்குக் காரணமாயின.

மக்கள் விழிப்பாயிருக்கத் தவறுதலும், ஆர்வமில்லாதிருத்தலும் 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' என்ற மனப் போக்குடன் இருப்பதும் தவிர்க்கப்பட வேண்டியது. தாமே ஆட்சியாளர்கள் என்பதை மக்கள் எந்த நிலையிலும் மறந்து விடக் கூடாது. ஆட்சியிலிருப்பவரை நோக்கிக் கோரிக்கைகள், கண்டனங்கள் விடக் கூடியவர்களாக அவர்களின் போக்கை உன்னிப்பாகக் கவனிப்பவராக இருக்க வேண்டும்.

ஆட்சியாளர்கள் குறுக்கு வழியைக கையாண்டு மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு இலாபம் சம்பாதிக்க முனைந்தால் சனநாயகத்திற்குச் சவால் விடுபவராகவே கருத முடியும். தலைமை எப்பொழுதும் நிதானமானதும், உயர் நோக்கும், கொள்கைப் பற்றும், தேசப்பற்றும் உள்ளதாகவும் இருக்க வேண்டும். சனநாயகம் நன்கு செயற்பட நல்ல தலைமைத்துவம் மிக அவசியம். சுயநலக் கும்பல்களின் ஆட்சிக்கும், கட்டுக்கடங்கா மக்கள் கூட்டத்தின் ஆட்சிக்கும் வழிவகுக்கும் வாய்ப்பேச்சு வீரரின் தலைமை மிக ஆபத்தானதாகும்.

1994ம் ஆண்டு சனாதிபதி வேட்பாளர் சமாதானத்தை கருப்பொருளாகக் கொண்டு பிரச்சாரம் செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். அதன் பின்னர் நாட்டின் பிளவை கருப்பொருளாகக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றினர். இப்போது சனாதிபதி வேட்பாளர்கள் எதைச் சொல்லுகிறார்கள் என்று மக்களுக்கு தெரியாமல் பசப்பு வார்த்தைகளை நெஞ்சில் உரம் இல்லாமல் பேசுகிறார்கள்.

**சனநாயக ஆட்சியை சாதாரண மனிதர்களின் ஆட்சி என்பர். திறமையுள்ளவர்கள், நிபுணர்கள் ஆகியோரின் ஒத்துழைப்ப அவசியம் அவர்கள் நான் ஆட்சி நடத்த வேண்டும் என்பது அவசியமில்லை.**

கட்டுரை

நல்ல சனநாயக ஆட்சியின் வெற்றிக்கு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். திறமைசாலிகள் ஒதுங்கியிருப்பது ஆபத்தானது சனநாயகத்தை வீழ்ச்சியடையச் செய்துவிடக் கூடியது.

தேர்தல் காலங்களில் மக்கள் முன்னிலையில் கொள்கைகளை முன்வைத்து அவர்களின் ஆதரவை பெற்றுக் கொண்டு பதவியில் அமரும் தலைவர்களும், கட்சிகளும் தமது ஆட்சிக் காலத்தில் சுயநலப் போக்குடையவர்களாக மாறுவதும் தமது தேவைகளை பூர்த்தி செய்ய குறுக்கு வழிகளை நாடுவதும் சனநாயக துரோகச் செயல்கள். சுயநலத் தேவைக்காக பாமரர்களை ஏமாற்றுதல், பாமரர்களை உணர்ச்சி வசப்படுத்தல் என்பன சனநாயகத்திற்கு எதிரான செயல்களாகும். சுயநலத் தேவைக்காக நாட்டைக் காட்டிக் கொடுத்தல், பிளவடையச் செய்தல் என்பன சனநாயகத்திற்கு சவாலாக அமையும் சக்திகளாகும்.

கவிதை

# கைகோர்ப்போம்

அ.ரூபன் – தரம் – 08 C

போர்முழக்கம் இன்றே நிற்கட்டும்-இங்கு
பிஞ்சுமொழி மட்டும் கேட்கட்டும்
சமாதானம் மலரட்டும் - நன்றாய்
நம் சிறார்களெல்லாம் வாழட்டும்

மூவினங்கள் ஒன்றாய் சேரட்டும்- புதுப்
பரணியொன்று உருவாகட்டும் - நம்
மூதாதையர் கனவு பலிக்கட்டும்- இத்
தரணியெங்கும் மகிழ்ச்சி நிலைக்கட்டும்.

# மகாத்மா காந்தி

காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர். இவர் 'வடஇந்தியாவிலுள்ள 'குஜராத்' மாநிலத்தில் 'போர்பந்தர்' என்னும் கிராமத்தில் 1869ம் ஆண்டு ஐப்பசி மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு 'மோகனதாஸ் கரம்சந்த் காந்தி' என்று பெயரிட்டனர். காந்தி என்பது அவரது குடும்பப் பெயராகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை உள்ளூரிலேயே பெற்றுக் கொண்டார். இவர் தனது இளம்பராயத்தில் 'அரிச்சந்திரன், சிரவணன் போன்ற நாடகங்களைப் பார்த்து நல்லொழுக்கத்தை கடைப்பிடித்தார். உண்மை பேசுபவராகவும், பெற்றோருக்கு கீழ் படிந்து நடப்பவராகவும் விளங்கினார். இப்பிராயத்திலேயே இவருக்கு அக்கால வழக்கப்படி பெற்றோர் 'கஸ்தூரி பாய்' எனும் பெண்ணை திருமணம் செய்து வைத்தனர்.

மோகனதாஸ் காந்தி சட்டக்கல்வி கற்பதற்காக இங்கிலாந்து சென்ற பொழுது இவரது தாயார் இவருக்கு பல அறிவுரை கூறினார். அவற்றுள் "மது அருந்தாதே". "பொய் சொல்லாதே" என்பன முக்கியமானவை ஆகும். இவ்வறிவுரைகளை மனதிற்கொண்டு வாழ்ந்தார். மூன்றாண்டுகள் முயன்று கற்று 'பாரிஸ்டர்' பட்டம் பெற்று இந்தியாவுக்குத் திரும்பினார்.



சிறிது காலம் இந்தியாவில் 'வழக்கறிஞர்' தொழிலில் ஈடுபட்டார். அப்போது ஒரு வழக்கு தொடர்பாக தென்னாபிரிக்காவிற்குச் சென்றார். தென்னாபிரிக்காவில் வாழ்ந்து வந்த இந்தியர்களை வெள்ளையர்களும், வெள்ளைய அரசாங்கமும் தாழ்வாக நடத்தியதைக் கண்டு வேதனைப்பட்டார். அவர்களது துன்பங்களை போக்குவதற்கு விழைந்தார். சத்தியாக்கிரக வழியில் நின்று, துயர் துடைக்க முனைந்தார் அதில் வெற்றியும் கண்டார். அதன் பின்னர் இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போது இந்தியா அந்நியருக்கு அடிமைப்பட்டு தாழ்வுற்றிருந்தது. இந்தியாவின் சுதந்திரத்திற்காக பலர் உழைத்தனர். காந்தியடிகளும் தம்மை அவர்களோடு இணைத்துக் கொண்டார். பலமுறை சிறை சென்றார். ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்த திடசங்கற்பம் பூண்டார். இவரது பெற்றோர் பெருஞ்செல்வந்தர்களாக இருந்தபோதும் இவர் கைராட்டினம் கொண்டு நெய்யப்பட்ட கதர் உடைகளை அணிந்து எளிமையான வாழ்க்கை நடாத்தி வந்தார். அகிம்சை ஒரு இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதை உணரத்தி அன்பு வழியில் நின்று நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். 1947ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி இந்திய சுதந்திரக் கொடி ஏற்றப்பட்டது.

காந்தியடிகள் எழுதிய 'சத்தியசோதனை' அவரது சுயசரிதையாகும். இந்நூல் மூலமாக இவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளலாம். இவர் கடைப்பிடித்த கொள்கைகளையும் அறியலாம். சத்தியத்தில் இவருக்கு கூடிய ஈடுபாடு இருந்தது. இவர் சத்தியமே கடவுள் என்று வாழ்ந்து காட்டியவர் ஆவார். சமூகத்திலிருந்து கொண்டு சமூக சேவை செய்தலே ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டிருந்தார்.

# சுனாமியின் விளைவினால் மாணவர்களின் உடல், உளப்பாதிப்புக்கள்

2004ம் ஆண்டு மார்கழி மாதம் 26ம் திகதி காலை வேளையில் கண் இமைக்கும் நேரத்தில் நம் அனைவரையும் மிகவும் துயரில் ஆழ்த்திய அந்த சோக நிகழ்வு நடந்தது அனைவரும் அறிந்ததே. அதுதான் கடல்கோள் அனர்த்தம். அன்று எமது மூதாதையர் இதன் அனர்த்தம் பற்றி நன்றாக தெளிவாக விளக்கிய போதும் நாம் அதனை கவனத்தில் எடுக்காத காரணம் இன்று பெரும் இழப்புடன் பெறுமதி மிக்க உயிர்களை இழந்து நிற்கின்றோம். கடற்கோள் அனர்த்தம் இன்று சுத்தத்தமிழ் கூறுவதை விடுத்து யாரோ இட்ட சுகமாய் அழைக்கக்கூடிய 'சுனாமி' எனும் பெயரால் அழைத்து சுனாமி வந்து போய்விட்டது என சுலபமாய்க் கூறிவிட்டு சென்றுவிடுகிறோம். ஆனால் இதன் தாக்கம் எவ்வாறானது என சற்று ஆழமாகப் பார்ப்போமாயின் பல உண்மைகள் தெரியவரும்.



சுனாமியினால் அதிகம் இறந்தோர் பெண்களும் சிறுவர்களுமாகும். அதேபோல் சுனாமி அனர்த்தத்தின் பின் விளைவுகளைத் தம் மனம் கனக்க சுமந்து நிற்போரும் இவர்களே ஆவர். இவர்களில் பாடசாலை மற்றும் முன்பள்ளி மாணவர்களிடையே பல வகையான மனமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவர்கள் தமக்கு சுனாமி ஏற்படுத்திய நெருக்கீடுகளை பலவித முரண்பாட்டுத் தன்மையான செயல்வடிவம் கொண்டு வெளிப்படுத்துகின்றனர். அவை தாம் எதைச் செய்கின்றோம் என்ற உணர்வின்றியே செயற்படுகின்றனர்.

மாணவர் தாம் எதைக் கூறும்போதும் ஒருவிதப் பதற்றம், பதகளிப்புத் தன்மையாகவே காணப்படுகின்றனர். இவர்களிடம் குறிப்பாக பின்வரும் குணங்கள் காணப்படுகின்றன.

அவை உளரீதியாக:
1. பதகளிப்பு.
2. கோபம்.
3. எதையும் சந்தேகத்துடன் நோக்குதல்.
4. பயபீதியுடன் எதையும் பார்த்தல்.
5. காரணமற்ற பயம்.
6. தனித்திருத்தல்.
7. பிற மாணவரைத் தாக்குதல்.
8. காரணமின்றி அழுதல்.
9. தடுமாற்றம்.
10. மறதி.

போன்ற குணவியல்புகளை வெளிக்காட்டுகின்றனர். அத்துடன் எவ்வாறான வினாக்கள் கேட்டபோதும் எந்தவித மாற்றத்தையும் தன்னகத்தே காட்டுகின்ற தன்மையற்றவராக தம் மனநிலையை எங்கோ செலுத்தியவராக காணப்படுகின்றனர். கல்வியில் மந்த நிலையை காட்டுகின்றனர்.

உடல் ரீதியாக நோக்கும்போது பலவகையான வேறுபட்ட பாதிப்புக்களைக் கொண்ட மாணவராகக் காணப்படுகினற்னர்.

1. அடிக்கடி நோய்வாய்ப்படுதல்.(காய்ச்சல்)
2. சொறி, சிரங்கு.
3. நெஞ்சுவலி.
4. வாந்தி.
5. மயக்கம்.
6. ஒவ்வாமை.
7. தனக்கு நோய் இருப்பதாக கற்பனையில் இருத்தல்.

போன்ற தன்மையுடையவராக காணப்படுகின்றனர். இவ்வாறான உடல், உளப் பாதிப்புக்கள் ஏற்படக் காரணம் சுனாமி ஏற்படுத்திய வடுக்களே ஆகும்.

சுனாமி வரும்போது எவ்வாறான அவஸ்தையை அம்மாணவன் எதிர்நோக்குகின்றானோ அதே மனப்பான்மைதான் பயம் கலந்த பதகளிப்பு, அச்சம் ஏற்படக் காரணமாகும். எப்படியான ஒரு ஒலியைக் கேட்கும்போதும் அவ்வொலியின் இரைச்சலானது சுனாமி நேரத்தில் மக்கள் அலறுவதும் கடல் இரைவதுமான ஓசையை செவிமடுத்தது அவன் நினைவுக்கு வருவதால் எந்த ஒலியைக் கேட்கும்போதும் இருளைப் பார்க்கும் போதும் காரணமற்ற பயம் ஏற்படுகிறது.

அடுத்து சுனாமி தனது உறவுகளை காவு கொண்டதன் விளைவுதான் அதனை ஜீரணிக்க முடியாமல் மற்றோருடன் பகிர்ந்து கொள்ள வழி தெரியாமல் தனித்திருத்தல், அழுதல், அச்சம்பவத்தை நிலைநிறுத்தி ஒரு கணம் பார்த்தல், தடுமாற்றம் அடைதல் போன்ற நிகழ்வுகள் தனது குடும்ப உறவுக்காக ஏங்குதலின் வெளிப்பாடே ஆகும். அடிக்கடி இவ்வாறான நிலை ஏற்படுவதனால் தடுமாற்றம் மறதி போன்ற உளத்தாக்கத்துக்கு உட்படுகின்றனர்.

இவ்வாறு பாதிப்புக்குள்ளான மாணவர் போசாக்குணவின்றி இருத்தல், கூடாரங்களில் ஒன்றித்திருத்தல், விளையாட இடமின்மை இவர்களை முகாம் வாழ்க்கையில் கவனிக்க, உரிய மதிப்பளிக்க முடியாமல் பெரியோர்கள் புறக்கணித்தல். அன்பு, காப்பு கவனிப்பு கிடைக்காமை, சுகாதார வசதியின்மை போன்ற பல காரணங்களாலும் சிறுவர் துஸ்பிரயோகம் ஏற்படுவதிலும் மாணவர் பலவித நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்து வேதனைகளை அனுபவிக்கின்றனர். அவ்வேதனையின் வெளிப்பாடே பிற மாணவருடன் முரண்படும் தன்மையாகும். தம் உள்ளக்கிடக்கைகளை வெளிக்காட்ட முடியாமல் கோபமாக அதனை வெளிப்படுத்துகின்றனர்.

தனது ஆசைகள் நிறைவேறாமையும் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையும் பலவித தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றின் மனத்தாக்கத்தை மாணவர்கள் வகுப்பறையில் காட்டுகின்றனர்.

சுனாமி நீரை அருந்தியதாலும் சுனாமி நீர் பிரவேசித்த பகுதிகளில் நடமாடியதாலும் அடிக்கடி காய்ச்சல் சொறி, சிரங்குகளுக்கு ஆட்படுவதும் சரியான பராமரிப்பின்மையும் இவ்வாறான விடயங்களால் வாந்தி,மயக்கம் ஒவ்வாமை போன்றன காணப்படுகிறது. அத்துடன் குறிப்பிட்ட நேரம் ஒரே இடத்தில் நிற்க முடியாமல் மயக்கமடைந்து விழும் நிலை காணப்படுகிறது. தனது உறவுகளை இழந்த சோகமும் கவனிப்புடன் உணவு ஊட்ட உரியவர் இன்மையாலும் மாணவர் போசனை இழந்து இந்நிலைக்கு ஆளாவர்.

தனது பாதிப்பு நிலை சிந்தனைக்கு உட்படும்போது அதிகமாக 14 வயதுக்கு மேற்பட்ட மாணவர் அடிக்கடி நெஞ்சு வலிக்கு ஆளாகின்றனர். இது துக்கத்தினை வெளிக்காட்டாமல் தமது மனதிலே அழுத்தி வைப்பதால் ஏற்படுகிறது. இதனால் மாணவர் பாடத்தில் கவனம் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அடுத்து சுனாமி பாதிப்பு மாணவர்களிடம் காணப்படும் விசேட தன்மை தனது உள்ளக்கிடக்கைகளை அத்திறன்மூலம் வெளிப்படுத்தலாகும். இது பாடசாலையில் பல இடங்களில் நிகழும், சித்திரத்தில் சூரியனும் கடலும் நிச்சயம் காணப்படும். அத்துடன் விசித்திரமாக கடலைக் கறுப்பாக வரையும் தன்மையும், நீரின்மேல் பொருட்கள் மிதப்பதுமாக வரையும் தன்மையும் காணப்படுகிறது. அத்துடன் சில மாணவர்கள் எவ்வாறான கற்பித்தலின்போதும் கொப்பி, மேசை, புத்தகம் எனப்பல இடங்களிலும் ஓர் மனித உடலை வரைகின்றனர். கேட்கும்போதே தெரியும் அது அவர்கள் இழந்த நெருங்கிய உறவு என்பதும் அவ்வுறவுகளே அவர்கள் சிந்தனை விட்டகலாது மனத்திரையில் ஊசலாடுகின்றனர் எனபது உண்மை.

எனவே மாணவர் இவ்வாறான தாக்கத்தில் இருந்து மீட்டெடுக்க சமூகம், பாடசாலை, குடும்பம் என அனைவரும் பங்கெடுத்து அவற்றுக்கு உகந்தபடி சமூகச்சூழலை அமைத்தும் பாடசாலையில் அம்மாணவர்களை இனங்கண்டு உடல், உள நிவர்த்திக் கற்பித்தலை ஏற்படுத்தியும், குடும்பம் அம்மாணவருக்கு சரியான பராமரித்தலையும் வழங்கினால் நாம் இப்பாதிப்புக்குள்ளான மாணவர் சமுதாயத்தை மீட்டு சிறந்த சமூகப்பிரஜையாக மாற்ற முடியும். இதில் இந்நாட்டைச் சேர்ந்த அனைவரது பங்களிப்பும் முக்கியமாகும். இதில் ஆசிரியர்களதும் சகமாணவர்களதும் ஒத்துழைப்பு மிக முக்கியமானதாகும். ஆசிரியரால் அனைத்து சமூகத்தையும் வழிநடாத்த முடியும். எனவே தங்களிடம் வரும் மாணவர்களின் நன்மை கருதி அவர் குடும்பத்தை அணுகி அவர் பிரச்சினை தீர்த்து சிறப்பான மாணவருலகத்தைக் கட்டியெழுப்புவோம். என உறுதி பூணவேண்டியது ஆசிரியர்களின் புனித கடமையாகும்.

நம் மூதாதையர் வகுத்துக் காட்டிய வழியில் நாம் சென்றால் இயற்கை சீறினாலும் நாம் பாதுகாப்புப் பெறலாம்.

"கடலுக்கு நான்குசாதம்
கங்கைக்கு இரண்டுசாதம் - சென்று
மனைவிக்கும் மகனுக்கும்
மகளுக்கும் மனைஅமைத்துக்
மகிழ்ந்திருப்பாயாக"

மனையடி சாஸ்திரத்தில் நம் மூதாதையர் கூறியதற்கேற்றவாறு எமது சமுதாயத்தைக் காப்போமாக.



இம்முறை க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதவுள்ள மாணவர் அனைவரும் நல்ல பெறுபேறுகளைப் பெற்று

**தேர்வில் வெற்றி பெற**

**வாழ்த்துக்கள்**

# சொல் அமுதம்

பஞ்சபேதி – அன்னபேதி, சந்திரபேதி, தூமபேதி, பரிசபேதி, மாங்கிசபேதி.

பஞ்சமேளம் - சங்கு, ஜாலர், தவில், மத்தளம், பம்பை.

பஞ்சரத்தினம் - பொன், மரகதம், மாணிக்கம், முத்து, இரத்தினம்.

பஞ்சலோகம் - இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி.

பஞ்ச வர்ணம் - வெள்ளை, கறுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை.

பஞ்சாமிலம் - இலந்தை, மாதுளை, புளியாரை, நெல்லி, எலுமிச்சை.

பஞ்சாமிர்தம் - தயிர், தேன், சர்க்கரை, நெய், பால்.

ஏழிசை – சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சம், ஐதவதம், நிடாதம்.

ஏழுபிறப்பு – தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம்.

எண் வகை மாலை – வெட்சி, கரந்தை, வஞ்சி, நொச்சி, காஞ்சி, உழிஞை, தும்பை, வாகை.

எண்வகை செல்வம்- அடிமை, இராஜாங்கம், சுற்றம், நெல், பொன், மக்கள், மணி, வாகனம்.

நவநதி – கங்கை, யமுனை, நருமதை, சரசுவதி, கோதாவரி, காவிரி, பயோஸ், சரயு, குமரி

சி.பவித்ரா- தரம்:9C

# மாணவரும் இலக்கியமும்



தற்காலத்தில் இலக்கிய வடிவங்களுள் சிறுகதை, கவிதை, நாவல் முதலியன ஏனையவற்றை விட ஜனரஞ்சகமாகத் திகழ்வதைக் காண்கிறோம். ஏனைய வடிவங்களான கட்டுரை, நாடகங்கள் முதலியன அருகியனவாகவே உள்ளன. அதிலும் எமது இலங்கையைப் பொறுத்தவரை தமிழ்நாட்டோடு ஒப்பிடுகையில் இவற்றின் தொகையும் உணர்ச்சியும் மிகக்குறைவாகவே உள்ளன. இத்தகைய இலக்கியங்களோடு மாணவச் சிறார்களின் பரிச்சயத்தை நோக்குவோமாயின் மிகமிகக் குறைவாகவே காணப்படுகிறது. இது மிக வருந்தக்கூடிய விடயமாகும். எதிர்காலத்தில் சிறந்த படைப்பிலக்கியங்களை உருவாக்க வேண்டிய இன்றைய மாணவர்கள் இவ்விதம் இலக்கியத் தொடர்பில் மிகக் குறைந்தவர்களாக இருப்பது விசனிக்கவேண்டிய விடயமாகும்.

இலக்கியங்கள் பண்டைய இலக்கியங்களாயினும், நவீன இலக்கியங்களாயினும் அவற்றை வாசிப்பதனால் மாணவர்கள் வரலாறுகளையும் கலாசார வளர்ச்சிகளையும் பண்பாட்டு வளர்ச்சிகளையும் நன்கு அறிந்து கொள்ள ஏதுவாகின்றது. அத்தோடு தமது வாழ்க்கையையும் சிறந்த முறையில் அமைத்துக்கொள்ள முடியுமாகவிருக்கிறது. மேலும் வாசிப்பதால் வாசிப்பறிவும் நல்ல மொழியறிவும் சிறந்த படைப்பிலக்கியப் பயிற்சியும் ஏற்பட வழியுண்டாகும்.

ஆனால் இன்றைய மாணவர்களில் இலக்கிய ஆர்வம் வெகுவாகக் குறைந்திருப்பதற்கான காரணங்களைச் சிந்திக்க வேண்டியவர்களாய் உள்ளோம். உண்மையாகவே மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களது கல்வித்திட்டத்தில் மொழிப் பாடத்துடன் சேர்த்தவாறு இலக்கியம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் மாணவர்களிடமோ எதிர்பார்க்குமளவிற்கு இலக்கிய ஆர்வம், இலக்கிய அறிவு முதலியன குறைந்தே காணப்படுகிறதென்றால் அதற்கு முதற்காரணம் சிறுபராயம்தொட்டு அவர்களுக்கு இலக்கிய ஆர்வத்தையும் இலக்கிய அறிவையும் இனிமையாகவும் இலகுவாகவும் கிரகிக்கக் கூடியவாறும் ஆசிரியர்கள் கற்பிக்கத் தவறுவதேயாகும்.

மேலும் இலக்கியப் பாடநூல்களில் மாணவர்கள் இலகுவாக இரசனையுடன் விளங்கிக் கொள்ளக் கூடிய பாட அலகுகள் ஒழுங்கான முறையில் தரப்படாதிருப்பது இன்னொரு காரணமாகும். அநேக இலக்கியப் பாடங்கள் மாணவர்களுக்கு இரசனையை ஊட்டுவதற்குப் பதில் வெறுப்பையும் சலிப்பையும் ஊட்டுவதாகவே உள்ளன.

அடுத்ததாக இன்றைய மாணவர்களிடத்து மொழி, இலக்கியப் பாடங்களின் முக்கியத்துவம் குறைவாகவே ஊட்டப்படுகிறது. பதிலாக விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவதால் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் மதிப்பு குறைகிறது. பொழுது போக்கிற்காகவேனும் இலக்கியங்களை நுகர்வது மிக அரிதாயுள்ளது. மாணவர் ஒருவரிடம் "நீங்கள் வாசித்த நாவலொன்றை கூறுங்கள்" எனக்கேட்டால் வரும் விடை பெரிதும் ஏமாற்றம் தருவதாகவே அமையக்கூடும்.

இத்தகைய நிலைக்கு முக்கியமான காரணம் இன்றைய நவீன தொடர்பு சாதனங்களும் அவற்றின் ஆக்கிரமிப்புமே எனலாம். அதிலும் குறிப்பாகப் பல்கிப் பெருகி உள்ள தொலைக்காட்சி சேவைகள், தனியார் வானொலிகள் மற்றும் சினிமாக்களோடு தொடர்புடைய கட்புல, செவிப்புலச் சாதனங்களின் அதிகரிப்பும் கணினி விளையாட்டுக்களும் செல்லிடத் தொலைவேசி பாவனை அதிகரிப்பும் மாணவர்களுக்கும் இடையான தொடர்பைக் குறைக்கின்றன. இவற்றுடன் மாணவர்களின் இடைவிடாத பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலையம் அதிகப் படியான வேலைப்பளுவும் மற்றொரு காரணமாகும்.

அத்தோடு மொழியிலக்கியக் கற்கைகள் நாகரீகம் அற்றவை என்ற கருத்தும், தற்காலத்துக்கு ஒவ்வாதன என்ற கருத்தும் மாணவரிடம் பெரிதும் நிலவுவதும் இலக்கிய ஆர்வத்திற்கு தடைக்கல்லாக இருக்கின்றன.

ஆனாலும் இலக்கிய அறிவு முக்கியமானதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இவை காலத்தின் கண்ணாடிகள். சமூகத்தை பிரதிபலிக்கும் விம்பங்களாகும். வாழ்வின் நன்மை தீமைகளை வகுத்துக் காட்டுவனவாகும். வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் வெளிச்சத்திற்கு கொண்டு வருவன. பண்பாடுகளையும் விழுமியங்களையும் பறை சாற்றுவன.

ஆகவே இவற்றைப்பற்றிய அறிவும் அதைப் பயிலும் ஆர்வமும் மொழியோடு கூடிய பற்றோடு மாணவர் பயிலல் அவசியமாகும். இதன்மூலம் இலக்கிய அறிவு மட்டுமல்ல, இலக்கண அறிவும் மேன்மையுறும் என்பது திண்ணம். இல்லாது தவிர்க்கப்படுமேயானால் "மெல்லத் தமிழினிச் சாகும்" என்று அன்றொரு பேதை உரைத்தது போல் ஆகிவிட நாம் காரணமாகக் கூடாது.

✦✦✦✦✦✦✦

# மாமேதைகளின் பொன்மொழிகள்

தொகுப்பு: எஸ்.ரம்யா- தரம்: 9



வாழ்க்கையின் முதற்பகுதியில் வெற்றி பெறத் தேவை சுறுசுறுப்பும் ஊக்கமும் தான். இறுதியில் வெற்றிபெறத் தேவை பொறுமையும், தன்னடக்கமும்.

—அரிஸ்டோட்டில்-



கடவுள் சேர்த்து வைத்ததை எந்த மனிதனும் பிரித்து வைக்க வேண்டாம். கடவுள் அதைக் கவனித்துக் கொள்வார்.

**-பெர்னாட்ஸா**



அநீதியைத் தாங்குபவனை விட அநீதி இளைப்பவனே அதிகளவில் அவதியுறுவான்.

-பிளேட்டோ-



புனிதமான செயல்களால் வாழ்வதே புகழ் எனப்படும்.

- சாக்கிரட்டீஸ்-

# அகரவரிசையில் அம்மா



அன்பின் உருவம் அம்மா
ஆறுதலின் வடிவம் அம்மா
இன்பத்தின் இன்மை அம்மா
ஈகையின் இருப்பிடம் அம்மா
உண்மையின் உருவம் அம்மா
ஊக்கத்தின் உச்சநிலை அம்மா
எளிமையின் பிறப்பிடம் அம்மா
ஏக்கத்தை தீர்ப்பவள் அம்மா
ஐயம் இன்றி வளர்ப்பவள் அம்மா
ஒவ்வொரு உயிரும் அம்மா
ஓதும் மந்திரம் அம்மா.

**-டெம்ஸ்டன் செலர்- தரம்- 8H**

# மாணவன்

கல்வியில் ஆர்வம் கடமையில் ஓர்மம்
கருத்தினில் சீலம் கனிந்திடும் பாவம்
குருவிடம் பணிவு குணத்தினில் உயர்வு
கொண்டவன் எவனோ அவனே மாணவன்

கற்ற கல்வியில் பற்றுதல் கொண்டு
முற்றுமுணர்பவன் முதன்மை மாணவன்
பெற்ற கல்வியால் தான்பெறும் இன்பம்
வையகம் பெறவே நினைப்பவன் மாணவன்

உற்ற நண்பனாய் உடன்துணை இருந்து
சுற்றம் காப்பவன் அரிய மாணவன்
நற்றிணை நூல்களும் நலன்தரு கலைகளும்
வற்றிடாப் பொய்கையாய் வளர்பவன் மாணவன்

வறுமையில் செம்மை வாழ்வினில் உண்மை
உரிமையில் திண்மை உளத்தினில் மேன்மை
உயிரிடம் அன்பு உயரிய பண்பெனும்
நிறைவுடன் வாழ்பவன் நிகரில் மாணவன்

**யோகநாதன் யோகினி, தரம்:10 H**

# உடற்கல்வியின் தத்துவவியல் அடிப்படை

உலகைப்பற்றி சமயரீதி, நடைமுறை ரீதியில் என்ற கண்ணோட்டத்தால் விமர்சனமும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தால் ஏற்படுகின்ற விமர்சனமும் அடங்கியுள்ளது. எந்தவொரு சிந்தனையாளனாலும் உலகம் சம்பந்தமான மேற்குறிப்பிட்ட இரு கண்ணோட்டங்களினால் எழுப்பப்படுகின்ற விமர்சனமும் ஏதாவதொரு விதமாக இருக்கும். நடைமுறையிலும் சமயத்துள்ளும் ஒவ்வொரு விதமாக இருக்கும். நடைமுறையிலும் சமயத்துள்ளும் ஒவ்வொரு சிந்தனையாளனும் பல்வேறு கட்டங்கள் மூலம் தத்துவவியலுள் பிரவேசித்துள்ளான். உதாரணமாக பிளேட்டோ அரசியலும் மனிதனும் என்பதைக் கருவாக வைத்தும் நகல் கணிதத்தை மையமாக வைத்தும் பேக்பிளே சமயத்தினூடாகவும் பிரவேசித்துள்ளான்.

மேலைத்தேசங்களைப் போலவே கீழைத்தேச சிந்தனைகளிலும் தத்துவவியல் எண்ணக்கருக்கள் அதிகமாக இருந்தன. ஒருவரின் உண்மை நிலை, உலகின் உண்மை நிலை இவை பற்றி உபநிதண்ட (உபநிடத) தத்துவங்களும் அடங்கியுள்ளது. உலகம் தொடர்பான எண்ணக்கருவின் விமர்சனமே தத்துவவியல் என்று கணிக்க முடியும்.

கல்விக்கும் தத்துவவியலுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது? என்பது மிக முக்கியமானதாகும். சகல கல்வி முறையும் அமையப் பெறுவது வாழ்க்கைக் கண்ணோட்ட அடிப்படையிலேயே என ஜே.எஸ்.எஸ்.பேனர் கூறியுள்ளார். கல்விக்கு வழிகாட்டுவது தத்துவவியலாகும். ஏதாவது கல்வி முறையில் பரந்த நோக்கங்கள், கொள்கைகள் முடிவு எடுத்தல், இவற்றிற்கு வழிகாட்டுவது தத்துவவியலாகும். எந்த ஒரு கல்வி முறையிலும் உதிக்கும் சிக்கல்கள் பார்வைக்கு இலகுவாகத் தெரியும். இப்படியான பிரச்சனைகளைத் தீர்க்க கட்டாயமாக வாழ்க்கைக் கண்ணோட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும். அவற்றைக் கவனிக்கும் பொழுது கல்விக்கும் தத்துவவியலுக்கும் இடையில் பிரிக்க முடியாத தொடர்பு இருப்பது தெளிவாகிறது. கல்வி நோக்கங்கள் எமது வாழ்க்கை நோக்கங்களை அளிப்பது வாழ்க்கைத் தத்துவவியல் அடிப்படையில் என்பதையும் றோபர்ட் ஆர்ரஸக் கூறுகின்றார். ஆசிரியரொருவரால் தத்துவவியல் அறிவு இன்றி மாணவர்க்கு உயர்ந்த வாழ்க்கைக் கண்ணோட்டத்திற்காக வழிகாட்ட முடியாது என்பதை ஏற்றுக் கொள்ளமுடியும்.

முழுமையான கல்விச் செயற்பாட்டில் உடற்கல்வி தவிர்க்க முடியாத முக்கியமான அம்சமாகும். ஆயின் கல்விக்கும் தத்துவவியலுக்கும் இடையே உள்ள அந்நியோன்னிய ஈடுபாடு உடற்கல்விக்கும் பொருத்தமானதாகும். உடற்கல்வியின் நோக்கம் பாடத்துறை தன்மை பற்றி தத்துவவியல் அடிப்படை இன்றி ஆராய முடியாது. உடற்கல்வி பரந்த நோக்கங்களை உள்ளடக்கியதாகும். இப்பரந்த நோக்குகளை தீர்மானிப்பதற்காக தத்துவவியல் அடிப்படையில் அமைந்திருப்பது முக்கியமானதாகும்.

இன்று மாணவனை மையமாகக் கொண்டு மாணவனின் முழு வளர்ச்சிக்காக தேவையான உடற்கல்வி செயற்பாடுகளின் வேலைத்திட்ட நோக்கங்களை முடிவு எடுப்பது பரந்த தத்துவவியல் எண்ணக்கரு. அளவையியலும் விஞ்ஞான முறைமையும், பொது உளவியல், ஒழுக்கவியல் இவற்றிற்கிடையே விஞ்ஞான முறையில் பல்வேறு முறைகள் பற்றி இலகுவாக அறிமுகப்படுத்துவது என்றால் உபவிதிகள் உருவாக்குதல், இவ்விதிகள் உண்மையானவையா என பரிசீலித்தல் இவை உண்மையற்றது எனின் அகற்றுதலும் ஆகும். இன்றைய உடற்கல்வித் துறையில் பணியாற்ற இவ்விதி முறைகளை வெற்றிகரமாக பயன்படுத்திக் கொள்ளலாம். தத்துவவியல் பாடத்துறையில் இன்னுமொரு துறையாக தலைமைத்துவம், பின்பற்றுதல், பங்குபெறல், விளையாட்டு மனப்பாங்கு என்பன உடற்கல்வி செயற்பாடுகளுடன் நிரந்தரமாக இணைந்துள்ளது. ஒரு விளையாட்டு வீரனது விளையாட்டு மனப்பாங்கு வளர்வதும் இதற்கமைவாகவேயாகும்.

எனவே உடற்கல்வித் தத்துவவியல் அடிப்படையை விளங்கிக் கொள்வதன் மூலம் உடற்கல்விப் பாடத்துறைக்கு ஆற்றும் சேவைக்கு மேலதிகமாக சுய தன்மையை முன்னேற்றிக் கொள்ளவும் முடியும். உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தை வளர்த்துக் கொள்ளவும் முடியும். எதிர்கால பிரச்சனைகளுக்கு ஒளிபெறச் செய்ய இத்தத்துவமே வழிகாட்டுகிறது. எனக்கூறினால் மிகையாகாது.

Y .சிவகுமார்.
(Dip-in.phy.)

# தமிழறிவு வினாவிடைத் தொகுப்பு



தொகுப்பு:

**பா.ஹிஷாந்தி,தரம்- 9C**

01. நளவெண்பா இயற்றியவர் யார்?
புகழேந்தி

02. நன்னூல் இயற்றியவர் யார்?
பவனந்தி முனிவர்

03. மாருதி என்று ராமாயணத்தில் சிறப்பிக்கப்படுபவர் யார்?
அனுமான்

04. சகுந்தலை வெண்பா பாடிய தமிழ் அறிஞர் யார்?
செனட்டர். சு.நடேசபிள்ளை.

05. இந்திய ஷேக்ஸ்பியர் யார்?
காளி தாசன்

06. தமிழ் தென்றல் என்று சிறப்புப் பெயர் கொண்டவர்?
திரு.வி.கல்யாணசுந்தரனார்.

07. தமிழில்தோன்றிய முதல் இலக்கண நூல் எது?
தொல்காப்பியம்

08. 'வசனநடை கைவந்த வல்லாளர்' யார?
ஆறுமுக நாவலர்

09. தமிழிலுள்ள முக்கியமான பௌத்த நூல்கள் எவை?
மணிமேகலை, குண்டலகேசி.

10. தமிழ் நாடகத்தந்தை எனப் போற்றப்பெற்றவர் யார்?
பம்மல் சம்பந்த முதலியார்.

11. தனித்தமிழ் நடையை ஆரம்பித்து பல நூல்களை இயற்றியவர் யார்?
மறைமலையடிகள்

12. முதலில் தமிழ் அகராதியைத் தொகுத்தவர் யார்?
கு.கதிரவேற்பிள்ளை.

13. தமிழ் அன்னைக்குத் தொண்டாற்றிய இத்தாலி நாட்டில் பிறந்த அறிஞர் யார்?
வீரமா முனிவர்

14. சிலம்புச் செல்வர் எனும் அடைமொழி கொண்டு அழைக்கப்படுபவர் யார்?
திரு. ம.பொ.சிவஞானம்

15. இரசிகமணி என்று அழைக்கப்பெறுபவர்?
திரு.டி.கே.சிதம்பரநாத முதலியார்.

16. எட்டுத் தொகை நூல்கள் எவை?
நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பரிபாடல், கலித்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு.

17. ஐம்பெரும் காப்பியங்கள் எவை?
சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.

18. ஐஞ்சிறு காப்பியங்கள் எவை?
சூளாமணி, உதயணனின் கதை, நீலகேசி, நாககுமார காவியம், யசோதர காவியம்.

19. பத்துப்பாட்டு நூல்கள் எவை?
திருமுருகாற்றுப்படை,பொருநராற்றுப்படை,சிறுபாணாற்றுப் படை,பெரும்பாணாற்றுப்படை,முல்லைப்பாட்டு,மதுரைக் காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், நெடுநல்வாடை.

20. ஐம்பெரும் குரவர் யாவர்?
அரசன், குரு, தந்தை, தேசிகன், மூத்தோர்.

கவிதை

# நெஞ்சு பொறுக்குதில்லையே!.......

திருமதி. மி. பவானந்தலிங்கம்



சாலையில் தனியாகச் செல்லவொண்ணா
சாவுக்கும் மணியடிக்கும் தண்டக்காரர்
தசையுண்ண விரும்புகின்ற ஆயுதங்கள்
மாந்தர் தனிவழிபோக நெஞ்சு பொறுக்குதில்லையே..

தாயிழந்து சேயிழந்து உடன்பிறப்பிழந்து
பொட்டிழந்து பூவிழந்து வாழ்விழந்து
மனையிழந்து தவித்து நிற்கும் மானிடரை
பார்ப்பதற்கு நெஞ்சு பொறுக்குதில்லையே!..

கூடிக்குலாவி கொஞ்சி மகிழும் கூட்டம்
ஆடிப்பாடித் தம்மை அலங்கரிக்கும் மக்கள்
கோட்டுச் சுகம் அனுபவிக்க அங்கலாய்த்து
நிற்கும் நிலைபார்க்க நெஞ்சு பொறுக்குதில்லையே!...

சின்னஞ்சிறார்கள் சிறுதேர் உருட்டி
சிங்காரமாய் சிரித்து வாழ முடியாமல்
ஆயுதங்கள் தாம் ஏந்தும் அவலவாழ்வை
பார்த்தும் கேட்டும் நெஞ்சு பொறுக்குதிலையே!..




இந்த நிலை நீடித்தால்
இளைஞர்குலம் அன்புகூர்ந்து
அன்னையின் அரவணைப்பில் துயில்கொள்ளும்
நிலை வருமா என நினைக்க நெஞ்சு
பொறுக்குதில்லையே!....

# வழுக்கல்

## த.அமர்நாத், கணிதப்பிரிவு, 13 R

சுனாமி ஓய்ந்துவிட்டது.
தேடல்கள் ஓயவில்லை. ஓலங்கள் ஒவ்வொன்றும் பற்பல கோலங்கள். டிசெம்பர் 30ம் திகதி 2004ம் வருடம். வானொலிகள், தொலைக்காட்சிகள் மாறி மாறி தொலைந்தவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

பிள்ளை ஒன்று வாயிலே சூப்பியோடு சிரித்துக் கிடந்த செய்தி குடும்பத்தில் எல்லோரையும் இழந்து விட்டோம் என்ற ஒரு தாய்க்கு ஒரு சிறு ஆறுதலை கொடுத்தது. ஓடினாள். உடைந்த பாலம் அவளுக்கு பெரிதாக இருக்கவில்லை. பல கிலோமீற்றர் தூரத்தில் அவள் இருந்தாலும் அவளுடைய உள்மனம் ஏதோ செய்தியை அவளுக்கு சொல்லிக் கொண்டே இருந்தது. யாருடைய உதவியையும் அவள் எதிர்பார்க்கவில்லை. உடல் வலியை அவள் பெரிது படுத்தவில்லை. சுனாமி, குழந்தையை மிக சேய்மையாக்கி விட்டது.



"ஆண்டவா!...."

உனக்கு நான் சூரிய கெவ்ளி இளநியால் அவிசேகம் செய்வேன். மற்ற பிள்ளைகளையும் புருசனையும் இப்படி தந்திட்டேயன்டா ஆயிரம் வேல் குத்தி காவடி எடுப்பேன். அப்பா!... ஆண்டவா!... முருகா!.. பிள்ளையாரே!.. காளி!.. சுடலை வைரவா!.. என்ட வகுத்துல பால வாத்திருங்கப்பா"

என்று சொல்லி குழந்தையை மாறி மாறி கொஞ்சினாள். சுற்றியிருந்த அத்தனை பேருடைய கண்களும் குளங்களாகின.

குழந்தையோடு தன்னுடைய வளவிலேயே இருந்த சூரிய கெவ்ளியை அதுவும் அவளுடைய கிராமத்திலே இருந்த அந்த ஒரே ஒரு தென்னையை நினைத்தபடி வேகமாக நடந்தாள். அது ஒரு அசுர நடை.

அவளுடைய கிராமத்திலேயே தென்னையிலே குரங்குபோல தாவியேறும் வல்லமையுடைய ஒருவன் இருந்தான். அவனையும் அவள் நினைத்தபடி நடந்தாள். ஆனால் அவளுடைய கிராமத்திலே, அவள் நினைத்த அவன் தனியொரு அநாதையாக நின்றிருந்தான். தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் மனைவியையும் இழந்துவிட்டான்.

"நான் ஏன் தென்னையை நம்பி வாழ்ந்தேன். இந்த ஊரிலே யாருமே தென்னையில் ஏறுவதிலே வல்லமை கொண்டவர்கள் இல்லை என்று நான் ஏன் இறுமாப்பு கொண்டிருந்தேன். எல்லாமே பொய்யாச்சி..."

எஞ்சியிருந்த அந்த தென்னை மரங்களை காறி உமிழ்ந்தான். காலால் உதைத்தான். கடலை பார்த்து தலையில் அடித்தான். யாராவது அவனை அப்போது கண்டிருந்தால் பைத்தியம் என்றே நினைத்திருப்பார்கள். தென்னையில் ஏறத்தெரிந்த படியால் தானே நான் மட்டும் தப்பினேன். என்று ஒப்பாரி வைத்தான்.

அவன் அகதி முகாமுக்கு செல்லவில்லை. தான் வாழ்ந்த கிராமத்திலேயே தனித்து நின்று அழிந்துபோக அவன் நினைத்தான். அவனால் உறங்கவும் முடியவில்லை. உண்ணவும் முடியவில்லை. தன்னுடைய ஊரை சுற்றி வந்து கொண்டேயிருந்தான்.

டிசெம்பர் 31இல் காலை விடிந்தபோது அவனுடைய காலடியில் தடார் என்று அந்த தாய் குழந்தையோடு விழுந்தாள். சிரிப்பதா?.. அழுவதா?.. நின்று நிதானமாக சிந்திப்பதா?.. உதறுவதா?.. உதவுவதா?.. இருவரும் நீண்ட நேரம் விவாதித்தார்கள். அழுதார்கள். பெருமூச்செறிந்தார்கள். சற்று ஓய்ந்தார்கள். மீண்டும் தொடர்ந்தார்கள். அவளுடைய கையிலே இருந்த குழந்தை சூப்பியோடு அவனைப் பார்த்துச் சிரித்தது.

அவளுடைய வளவை நோக்கி அவர்கள் நகர்ந்தனர். ஒருவரும் சளைக்கவில்லை.

அந்த மரம் மீண்டும் அப்படியே நின்றது. அவள் அவனைக் கெஞ்சினாள். மண்ணிலே விழாமல் இளணியை பறித்துத் தரும்படி அவள் கெஞ்சினாள். மீனவர் கிராமத்தில் அப்போது வலைக்கோ கயிறுக்கோ பஞ்சமில்லை. கயிற்றோடு இருட்டிலே நடக்கும் நோயாளி போன்று செயற்பட்டான். அந்த ஊரிலே அந்த மரம்தான் உயர்ந்த மரமாக இருந்தது. அவ்வாறான மரங்களில் எல்லாம் அவன் ஏறியிருந்த போதெல்லாம் கண்ணுக்கு எட்டிய வரை இயற்கையை ரசித்திருந்தான். அதெல்லாம் இப்பொழுது பழைய கதை .

மெதுவாகக் கயிற்றிலே இறக்கிய இளணியை அவள் பற்றிப் பிடித்தாள். இந்தளவு உயரத்திற்கு இது விழுந்திருந்தால் வழுக்கல் தெறித்தல்லவா இருக்கும். என்று நினைத்தவள் நன்றி சொல்லக் கூட காத்திருக்காது. குழந்தையோடு நகர்ந்தாள்..

வட்டுக் கொண்டு அல்லவா அவன் அதை பறித்துக் கொடுத்தான். அவள் போவதைப் பார்த்து பக்கத்து இளணியில் தலையை முட்டிக் கொள்ள அவன் முனைந்தான் .

உணர்வில்லாத அவனது உடல் அதிலே மூடியிருந்த கண்கள். உடல் அசைந்த பொழுது அவன் நினைத்தபடி அவனுடைய தலை இளணியில் படவில்லை. முட்டும் பொழுதுதான் கண்களைத் திறந்தான். பக்கத்திலே விரிய எனக் காத்திருந்த தென்னம் பாளை ஒன்று அவனுடைய வலக் கண்ணுக்கு களுமரமாகியது.

அவனுக்கு நோ எதுவும் தெரியவில்லை. பாளையிலிருந்து அவன் தன்னுடைய கண்ணை விடுவித்த போது அவனுடைய கண்விழியின் வழுக்கல் பாளையில் சளிபோல வழிந்து சென்றது.

****

# எழுத்தாற்றல் மந்த நிலையில் இருப்பதற்கான காரணங்கள்



*க. சர்மிளா-13*

எழுத்து என்றால் என்ன? என்று முதலில் நோக்குவோம். ஒலியின் வரி வடிவம் எழுத்து ஆகும். எழுத்தானது ஒலிகளை குறிக்கவும் அவ்வொலிகளுக்குரிய வரி வடிவத்தை குறிக்கவும் பயன்படுகிறது, இவ்வெழுத்து ஆற்றலானது இன்றைய நிலையில் எவ்வாறு இருக்கிறது என்பதை நாம் கவனிப்போமானால் ஒரு மந்த நிலைக்குள் தள்ளப்பட்டுக்கிடக்கிறது. இதற்கான காரணங்கள் யாது? என ஆய்வு செய்தால் இதற்கான காரணங்களாக பலவற்றைக் குறிப்பிடலாம். அவற்றை நாம் ஒவ்வொன்றாக எடுத்து நோக்குவோம். இன்றைய நவீன யுகத்தில் எழுத்தாற்றல் ஆர்வம் கொண்டவர் எத்தனைபேர் என்று விரல் விட்டு எண்ணிப் பார்த்துவிடலாம். அவ்வாறான நிலையே இன்று காணப்படுகிறது.

இன்று எழுத்தாற்றல் மந்த நிலையில் இருப்பதற்கு முதற்காரணம். எழுத்தின் மேல் மக்களுக்கு உள்ள ஆர்வமின்மையே ஆகும். எனவே மக்கள் ஆர்வக் குறைவு உள்ளவர்களாக இருக்கும்வரை எழுத்தாற்றல் மந்த நிலையிலேயே காணப்படும். ஓய்வு நேரத்தை எழுதுவதற்கு பயன்படுத்துவது எத்தனை பேர்? எல்லோருமே ஓய்வு நேரத்தை பிரயோசனமாகக் கழிப்பதில்லை. இன்றைய இளைஞர்களை எடுத்து நோக்குவோமானால் அவர்கள் ஓய்வு நேரத்தை எழுதப் பயன்படுத்துகிறார்களா? இதற்கு விடை இல்லை என்பது தான். ஒவ்வொரு வீதிகளிலும் நின்று அரட்டையடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இளைஞன் என்பவன் யார்?.. நாளைய நாட்டின் தூண். ஒரு தூண் இல்லாமல் ஒரு கட்டிடம் நிலைக்குமா?... இல்லவே இல்லை. எனவே இன்றைய இளைஞர் சமுதாயம் இல்லாமல் நாடு இல்லை. எனவே ஒவ்வொரு இளைஞனும் கையில் காகிதமும் பேனாவும் எடுத்தால் போதுமே காவியமே படைத்து விடலாம். இவர்கள் இதில் ஆர்வம் காட்டினால் போதும் மக்கள் விழிப்புணர்வு பெற்று விடுவார்கள்.

இன்றைய இளைஞர் ஒவ்வொருவரும் எழுத்தின் மேல் ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்கள். மக்களும் அதில் ஆர்வம் காட்டுவதில்லை. இந்த காரணத்தினாலும் எழுத்தாற்றல் மந்த நிலையில் காணப்படுகிறது.

இன்னுமொரு காரணி மக்களிடையே சிந்தனை ஆற்றல் இன்னும் மேலோங்கவில்லை. இறைவன் மனிதனுக்கு ஆறறிவைக் கொடுத்துள்ளான். அதாவது பகுத்தறிவு எனும் மேலான அறிவைக் கொடுத்துள்ளான். இதை நல்ல முறையில் பயன்படுத்த எல்லோரும் தவறிவிடுகிறார்கள்.

எமக்குள் இருக்கும் சிந்தனை எனும் தீயை தூண்டிவிட்டால் போதுமே எமக்குள் ஞான ஒளி கிடைக்கும். "சிந்தனை செய்மனமே" என்ற முதுமொழியிலிருந்து சிந்தனை ஆற்றல் எவ்வளவு அவசியம் என்பது புலனாகின்றது. எனவே இன்றைய காலகட்டத்தில் எழுத்தறிவு பற்றி சிந்திக்கும் வகையில் எவரும் காணப்படவில்லை. இவ்வாறான நிலை காணப்பட்டால் எவ்வாறு எழுத்தறிவு வளர்ச்சி அடையும். ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கத் தவறுவதால் தான் பல தவறுகளைச் செய்கின்றான் .எனவே எழுத்தைப் பற்றிய சிந்தனை ஆற்றல் குறைவாக காணப்படுவதாலும் எழுத்தறிவு மந்த நிலையில் காணப்படுகிறது.

எழுத்தறிவு மந்த நிலையில் காணப்படுவதற்கு வாசிக்கும் ஆற்றல் குறைந்து வருவது முக்கிய காரணியாகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என திருவள்ளுவர் கற்க வேண்டியவற்றை தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும். என்று கூறுகின்றார். வாசிப்பதால் எழுத்தாற்றலும் வளர்ச்சி அடையும். எனவே தான் பல நூலகங்களை இன்று எல்லா இடங்களிலும் அமைத்துள்ளார்கள். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்று கூறப்படுகிறது. எனவே வாசிப்பு ஒரு நல்ல எழுத்தாளனை உருவாக்கும். எனவே தான் ஒரு கவிஞர் "ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி" எனப்பாடியுள்ளார். இதிலிருந்து என்ன புரிகிறது. ஆள் மட்டும் வளர்ந்தால் போதாது. அறிவும் வளரவேண்டும். அறிவு வளர என்ன செய்ய வேண்டும். நன்றாக வாசிக்க வேண்டும். நன்றாக எழுத வேண்டும். எனவே இன்றைய காலகட்டத்தில் மக்களிடையே வாசிக்கும் ஆர்வம் குறைந்து காணப்படுகிறது. வாசிக்கும் ஆர்வம் இருந்தால்தானே எழுதுவதற்கு ஆர்வம் வரும். எனவே வாசிக்கும் ஆர்வம் குறைந்து வருவதாலும் கூட எழுத்தறிவு வீதம் மந்த நிலையில் காணப்படுகிறது.

எழுத்தறிவு மந்த நிலையில் இருப்பதற்கு நவீன கலாசார மாற்றங்களும் ஒரு காரணியாய் அமைந்து விடுகிறது. இன்றைய நவீன காலகட்டத்தில் அனைவருமே நவீன கலாசாரத்தையே அதிகம் விரும்புகின்றனர். வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், கணனி விளையாட்டு என்பவற்றை இன்றைய இளம் வயதினர் விரும்புகின்றனர். கவிதை, கட்டுரை, சிறுகதை, தொடர்கதை போன்றவற்றை எழுதுவதில் ஈடுபாடு இல்லாதவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறு அனைவருமே நவீன கலாசாரத்தில் மூழ்கி இருப்பதால் எழுதுவதில் அக்கறை குறைவாகவே காணப்படுகிறது. எனவே இவ்வாறான நிலை காணப்பட்டால் எழுத்தாற்றல் மந்த நிலையிலே தான் காணப்படும்.

அடுத்த காரணி, நேரம் கிடைப்பதில்லை என்பதையும் எழுத்தறிவு மந்த நிலையில் காணப்படுவதற்கான காரணியாகக் கூறலாம். பாடசாலை மாணவர்களை எடுத்துக் கொண்டால் காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்லுமுன்னும் பின்னும் தனியார் வகுப்புக்கள். பின்பு எழுதுவதற்கு இவர்களுக்கு எங்கே நேரம் கிடைக்கும். இவ்வாறு பாடசாலை மாணவர்களின் நிலை. பெற்றோரின் நிலை வேலைக்கு போய் வீட்டுக்கு வருவதே எட்டு மணிக்குத்தான். எனவே நேரம் கிடைக்காத காரணத்தினாலும் எழுத்தறிவு மந்த நிலைக்கு தள்ளப்படுகிறது.

மற்றுமோர் காரணியாக முன்வராத தன்மை. இதையும் எழுத்தறிவு மந்த நிலையில் காணப்படுவதற்கு ஒரு காரணியாகக் கூறலாம். தங்களுக்குள்ளே பல திறமைகளை வைத்துக் கொண்டு அதை வெளியில் கொணர கூச்சப்பட்டுக் கொண்டு தங்களுக்குள்ளேயே திறமையை சிலர் பூட்டி வைக்கின்றனர். கதை, கட்டுரை, கவிதை எழுதத் தெரிந்திருந்தும் அதை வெளிப்படுத்த முன்வராத தன்மையால் வெளியுலகிற்கு தெரியாமலே போய் விடுகிறது. எனவே இவ்வாறு தங்களுக்குள் இருக்கும் ஏராளமான திறமைகளை முன்னுக்கு கொண்டு வராததால் அவர்களுக்குள் இருக்கும் எழுத்தறிவு மந்த நிலையிலேயே காணப்படுகிறது.

எனவே எழுத்தாற்றலின் மந்த நிலைக்கு ஆர்வக் குறைவு இல்லாமை, வாசிக்கும் ஆர்வம் குறைவு, நவீன கலாசார மாற்றங்கள், நேரமின்மை, தன்னம்பிக்கை இல்லாமை போன்ற காரணங்கள் நம்மவரது எழுத்தாற்றல் மந்த நிலையிலே இருப்பதற்கான காரணங்களாகத் திகழ்கின்றன.

****

சி.விசித்ரா, தரம்: 5

# கல்வி



எத்தனை செல்வமும் எத்தனை வீரமும்
கல்விக்கு ஈடாகுமா?
கல்வி இல்லாத செல்வமும் வீரமும்
வாழ்வுக்குப் பயனாகுமா?

அறிவோடு ஆற்றலும் அர்த்தமான வாழ்வும்
கல்வியினால் அல்லவா? – அந்தக்
கல்வியைக் கற்காது காண்கின்ற சிறப்புக்கள்
பொய்யான பொருளல்லவா?

மதிப்போடு மரியாதை மாண்பான பட்டங்கள்
கற்றவர்க்கே அல்லவா? – அவர்
இறந்தாலும் இறவாது என்றும் நிலைப்பது
அவர் பெற்ற புகழல்லவா?

கல்வியால் அடைகின்ற கருத்தான நன்மைகளை
நாம் அடைதல் வேண்டுமன்றோ!- அதற்
குரித்தான பாதையினில் நாமும் நிதம் சென்று
நற்கல்வி பெற்று வாழ்வோம்.

**'மற்றவர்கள் உங்களிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அப்படி நீங்கள் மற்றவர்களிடம் நடந்து கொள்வதற்குப் பெயர் தான் ஒழுக்கம்'**

**-பெரியார்-**



பொதுக் கட்டுரை

# அண்மையில் மறைந்த எழுத்துச் சூரியன் சொக்கன் :



*1930ம் ஆண்டு மே மாதம் 02ம் திகதி அச்சுவேலி ஆவரங்காலில் பிறந்த கந்தசாமி செட்டி சொக்கலிங்கம் என்கின்ற சொக்கன் தமிழ் இலக்கிய உலகில் நீண்ட காலமாக தனது எழுத்துக்களால்- விசாலித்து வந்த படைப்பாளியாவார்.*

*கடந்த 10-12-2004 அன்று தனது 74வது வயதில் காலமான சொக்கன் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரையியல், சமயம், வானொலிச் சித்திரங்கள்., பாடநூல்கள், மொழி பெயர்ப்புகள் எனப் பல துறைகளிலும் தனது எழுத்தினை வளையவிட்டவர்.*

கற்றலியே மிகுந்த ஆர்வம் செலுத்திய இவர் பண்டிதர், பட்டதாரி, முதுகலைமானி, கலாநிதியென தனது கல்விச் செழுமையை விரித்துக் கொண்டே சென்றுள்ளார்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக தனது தொழிலை ஆரம்பித்த சொக்கன் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் டிப்ளோமா பட்டப் படிப்பை மேற்கொண்டதோடு 'ஈழத்து நாடகத்துறை' எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் M.A., பட்டத்தினையும் பெற்றார். பின்னர், இவ்வாய்வுக் கட்டுரை 'முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினரால்- அச்சிட்டு வெளியிடப்பட்டது. சொக்கனின் முதலாவது நூலாகவும் இதுவே அமைந்தது.

இவரது இலக்கியப்பணி மிகவும் பரவலானது. மாணவரது நலன்கருதி 'இலக்கணம்' தொடர்பான மிக எளிய முறையிலான 'இலக்கணத் தெளிவு' போன்ற நூல்களையும் 'இந்து நாகரீகம்' போன்ற பாடநூல்களையும் எழுதியதோடு மட்டுமன்றி,

01. பாரதி பாடிய பராசக்தி.
02. பைந்தமிழ் வளர்த்த பதின்மர்.

03. நல்லை நகர் தந்த நாவலர்.
04. சேர்.பொன்.இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்.
05. ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வரலாறு.
06. விபுலானந்த கவியமுதம்.
07. இருபெரும் நெறிகள்.
08. இலக்கியக் கருவூலம்.

எனப்பல நூல்களை எழுதியுள்ள சொக்கன், யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை, நாவலர் பாடசாலை, ஸ்ரான்லிக் கல்லூரி, பலாலி ஆசிரிய கலாசாலை, பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் கற்று தன்னை ஒரு கல்வியாளனாக வளர்த்துக் கொண்ட இவர், அரசினர் பாடநூல் வெளியீட்டு ஆலோசனைக் குழு உறுப்பினராக கடமையாற்றி தமிழ், சைவநெறி ஆகிய துறைகளுக்கு அளப்பரிய பங்காற்றியுள்ளார். 10ம், 11ம் தரங்களுக்குரிய சைவ நெறிப் பாடநூல்களின் எழுத்தாளராகவும் விளங்கிய சொக்கன் அவர்கள் தனது 14 வயதிலேயே எழுத்துலகில் பிரவேசித்து விட்டார்.

சொக்கன், ஆராவமுதன், அடியவன், வேனிலான், தேனீ, சுடலையூர்ச் சுந்தரன், சோனா, திரிபுராந்தகன், ஈழசேனன், வீரசிங்கன், சாம்பவன், ஜனனி, குறளன் மற்றும் இன்னும் பல புனைபெயர்களிலும் இவர் எழுதி வந்துள்ளார்.

நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது சிறுகதைத் தொகுதியான 'கடல்' 1972ம் ஆண்டுக்கான இலங்கை சாகித்ய மண்டலப்பரிசைப் பெற்றது. இவர் எழுதிய சிறுகதைகளுள் குட்டை நாய், மாணிக்கம், கடைசி ஆசை, விநோத நண்பன், கடல் போன்றவை மிகவும் குறிப்பிடத்தக்கவை.

நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்த சொக்கன் 'ஈழமுரசு'ப் பத்திரிகையின் ஆரம்ப காலப் பத்திராதிபராகவும் கடமையாற்றினார்.

"சொக்கன் பகலில் நிலத்தைப் பார்த்து புனைகதைகளை சிருட்டித்தார். இரவில் வானத்தைப் பார்த்து சமய நூல்களை எழுதினார்." எனப் பேராசிரியர் நந்தி குறிப்பிட்டுள்ளார்.

நாடகத்தமிழுக்கு பல அரிய நூல்களை வழங்கிய இவரது சிலம்பு பிறந்தது, சிங்ககிரிக் காவலன், தெய்வப் பாவை, மாருதப்பிரவல்லி, மானத்தமிழ் மறவன் என்பன குறிப்பிடத்தக்க நாடக நூல்களாகும்.

அத்தோடு, ஈழத்து நவீன நாவல் வரலாற்றில் சாதியத்தினை கருவாகக் கொண்டு முதன் முதல் நாவல் படைத்த பெருமை சொக்கனுக்கேயுரியது என்கிறார் செங்கை ஆழியான். சொக்கனின் 'சீதா' அவ்வாறு சிறப்புப் பெற்ற நாவலாகும். செல்லும் வழி இருட்டு, ஞானக்கவிஞன், சலதி என்பன சொக்கன் படைத்த நாவல்களாகும். இவற்றுள் சலதி-நாவல் இலங்கை இலக்கியப் பேரவையினரின் பரிசினை 1987இல் பெற்றுக் கொண்டது.

இதுபோக 'சத்யஜித்ரேயின் பத்திக்சாந்த்' சொக்கனால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதன் மூலம் அவரது மொழிபெயர்ப்புத் திறனும் புலனாகிறது.

பாடநூல்கள் - தமிழ் நாடக நூல்கள் - ஆய்வுநூல்கள் - கட்டுரை நூல்கள் - நாவல்கள் - கவிதைகள் எனப்பல நூல்களை எழுதிய சொக்கன் ஈழகேசரியில் 1947 இல் 'கனவுக் கோயில்' என்ற வரலாற்றுக் கதையுடன் தனது சிறுகதைத் துறையை ஆரம்பித்தார். பின்னரும் ஈழகேசரியில் பல சிறுகதைகளை எழுதியுள்ள சொக்கன் 'மறுமலர்ச்சியில்' பொன்னாச்சி என்ற சிறுகதையையும் எழுதியுள்ளார்.

சிறுகதைத் துறையில் பல பரிமாணங்களைப் படைத்த சொக்கனது அண்மைக்கால சிறுகதைத் தொகுப்பாக 'கிழவரும் கிழவியும்' என்ற தொகுதி விளங்குகிறது .

இப்படி தனது 17 வது வயதில் ஈழத்துச் சிறுகதைத் துறையில்



காலடி வைத்து இலங்கையர்கோன் காலத்திலும் எழுதி பின்னர் டானியல், எஸ்.பொ. போன்றோரோடும் எழுதி, அதைத் தொடர்ந்து செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், காலத்திலும் எழுதி தலைமுறை தாண்டிய எழுத்தாளராகத் திகழ்ந்த பல துறைச் சாதனையாளரான சொக்கனுக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தமிழ்மாமணி என்ற பட்டத்தையும், இந்துக்கலாசார அமைச்சு இலக்கியச் செம்மல் என்ற பட்டத்தையும் , நல்லூர் தமிழிசைச் சபை குகஸ்ரீ என்ற பட்டத்தையும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் 'இலக்கியக் கலாநிதி' என்ற பட்டத்தையும் இலங்கை அரசு 'சாஹித்திய இரத்தினம்' என்ற பட்டத்தையும் வழங்கி சொக்கன் என்ற மாமனிதனை கௌரவித்ததன் மூலம் தம்மை கௌரவித்துக் கொண்டன.

**எஸ்.ஏ.ஸ்ரீதர்**

intervideo
win DVD creator-2



நன்றி மீண்டும் சந்திப்போம்



# தமிழ்

ஆதிசிவன் பெற்றெடுத்த அருந்தமிழ்
அகத்தியன் வளர்த்தெடுத்த பெருந்தமிழ்
மூவேந்தர் காத்துவந்த முத்தமிழ்
மூவுலகும் போற்றுகின்ற முத்தமிழ்

கம்பனின் கவியாகி வள்ளுவனின் குறளாகி
பாரதியின் பாவான பைந்தமிழ்
தேவாரத் தேனாகி திருவாசகப் பாவாகி
பாவேந்தர் போற்றுகின்ற பைந்தமிழ்

காலத்தை கடந்து நிற்கும் கன்னித்தமிழ்
கணக்கிலா இலக்கியங்கள் கண்ட தமிழ்
ஞாலத்தில் இலக்கணங்கள் கொண்ட தமிழ்
ஞானியரும் போற்றுகின்ற நல்ல தமிழ்